[illegible]

V 6 No. 36 14 Sep 1933

3L
[illegible], N28KN
N33-6.36
189160

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

19 JAN 1934

Vol 6.] 1933 ஹு செப்டம்பர் மீ 14உ [No. 36

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 661
2. அப்பர் (64 கலை-வியாகரணம்-யாப்பியல்)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 663
3. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்துமாலை 665
4. அமீல் (Henri Frederic Amiel)
T. R. இராஜகோபால் 667
5. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 9-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 668
6. கலித்தொகை (பாலைக்கலி, 25)
T. A. கனகசபாபதி முதலியார் 670
7. காற்றுமழை (அங்கம் 4. களம் 1.)
Shakespeare's Tempest 671
8. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 673
9. பொதிகை நிகண்டு (வ - வா - வி)
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 675
10. வர்த்தமானம் 676

கலாநிலயம்

189160.

காட்சியே காணல்.

காண்பதெல்லாங் காட்சியன்று. தென்படும் பொருள்களின் நிறமும் உருவமும் இருக்குமாறு தெரிந்துகொள்ளும் பொறியுடையவர் தம்முகத் திரண்டு புண்ணுடையவரேயன்றி வேறல்லரென்று விளம்பினர் திருவள்ளுவர். புண்ணென்று புகலப்பொருத கண்களைக் கண்ணாடியென்று கூறிக்கொள்ளலாம். எதிர்நின்ற பொருள்களின் உருவமும் நிறமும் கண்ணாடியிலும் விழுகின்றன. எனின், கண்ணிற்கும் கண்ணாடிக்கும் வேற்றுமை யில்லையே? தின்பதற்குத் தேடுவதிலும் தேடியதைத் தின்பதிலும், இன்னவாறு தேடித் தின்னத் திரிகின்ற மற்றவர்களை உறவுசெய்தும் பகைத்தும் கெடுப்பதிலும், தம் காலமும் கருத்தும் செலுத்திக் கழிக்கின்ற மக்கள்வரையில் கண்ணுக்கும் கண்ணாடிக்கும் ஒரு வேற்றுமையில்லை, இருக்கவேண்டுமென்ற அவசியம் அவர்களுக்குத் தோன்றுவதுமில்லை. ஏனெனில், இவ்வகைச் சனங்களுக்கு இவ்வுலகம் ஒரு காணப்படுபொருளே யன்றி, இவ்வுலகமே ஒரு காட்சியாவதென்னும் தன்மை அவர்தம் இயற்கையில் இல்லை.

காட்சி வேறு, காணப்படு பொருள் வேறு. ஒரு பொருளைக் காணும்போது சிலர் அதனைக் காணமாத்திரம் காண்கின்றார்; மற்றுஞ் சிலர் அதனைக் காண்பதினின்று காட்சிகொள்கின்றார். இப்பின்னவர்தாம் கலைஞர், முன்னவர் அவர் அல்லாதார். உண்மையில், இவ்வுலகமக்களைக் கலைஞர் என்றும் கலைஞர் அல்லாதார் என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். கலைஞர்க்கு உளதுகாட்சி, ஏனையோர்க்கு அது இல்லை, காணப்படும் பொருள்களே யிருக்கின்றன.

தம்மால் காணப்பட்ட பொருளைப் பிறருக்குக் கற்றுத்தருபவர் கலைஞரல்லர், இவர் கைத்தொழிலாளர். இவர்களுடைய கைகளும் கண்களும் வயிற்றிலேயே வேரூன்றி முளைத்திருப்பன. கலைஞர் தம் காட்சியின் அனுபவத்தை வெளிப்படுத்த முயல்கின்றவர். அவ்வகைக் காட்சியின் அனுபவம் பொறிகளின் வழியாய் நமதுஉணர்வினை எட்டும்படி செய்வதற்குச்சிற்சிலவற்றைச் சிற்சில கலைஞர் முதற்கருவிகளாகக் கொள்கின்றனர். காட்சியின் அனுபவம் கலைஞர் அனைவர்க்கும் ஒன்றே.இவ்வனுபவத்தை வெளிப்படுத்தச்சிற்பக்கலை கல்லைத் தேடிக்கொள்கின்றது; சித்திரத்திற்கு வேண்டியன வர்ணங்கள்; ஒலிகளை உபயோகப்படுத்திக்கொள்கின்றது சங்கீதம். சொற்களைச் சார்ந்து நிகழ்வது கவித்துவம்.

கலையின்நலத் துதித்தகாட்சியனுபவத்தின்தன்மை யாவதென்பதை ஒருவராலும் வகைசெய்து உரைக்க இயலாது. பற்பலர் பற்பல வகைகளில் இதனை ஆராய்ந்து உரைக்கின்றார்களாயினும் இறுதியில் அவைகளில் ஒன்றும் உண்மையில்லை. நம்மைச் சூழ்ந்திருப்பவைகள் நம்மைத் தாக்குவதால் நமது உள்ளத்தில் உண்டாகும் எதிர்நிகழ்ச்சியே கவித்துவமாகின்றது என்பார் ஒரு சாரார். அதனை வெளிப்படுத்துவதற்கு வேண்டிய மொழியறிவும் இலக்கணப் பயிற்சியும் அடைவானாயின் ஒருவன் கவி ஆகிவிடுகிறான் என்று

கருதுவார். இவ்வளவேயாயின், சிலப்பதிகாரத்தில் கானல்வரி பாடிய இளங்கோவடிகளுக்கும், இன்று சரமகவி சாற்றுக்கவிகள் குவிக்கின்ற 'வித்துவான்'களுக்கும் வேற்றுமையில்லாமற் போய்விடும். சூழ்ந்திருக்கும் நிலையைப் பொருந்தியதன்று கவிதை. அது தன்னளவிலே தனியாட்சியுடையது. சூழ்ந்துநிற்கும் நிலைகளும் பொருள்களும் ஒருவனை எங்ஙனம்அசைக்கின்றன என்பதன்று கலையின் திறம். சூழ்ந்திருக்கும் நிலைகளும் பொருள்களும் ஒருவனுக்கு என்னவாகின்றன, அல்லது அவைகளை அவன் எங்ஙனம் ஆக்கிக்கொள்கின்றான் என்பதே கலைஞரின் கேள்வியும் காரியமும் ஆகும். இவைகளைப்பற்றிய கருத்து கவனம் கற்பனை எண்ணம் எல்லாம் கலையின் அம்சங்கள் ஆயினும், கலையென்பது இவைகளனைத்துமாகி அவைகளுக் கப்பாலு மாவதொன்று.

இத்தகைய செவ்விவாய்ந்த கலைஞர் தாம் கண்ட பொருள்களினின்று காட்சிகொள்கின்றனர் என்று முன்னர்க் கூறினோம். கண்டபொருளினை இவர் மனமானது முழுமையாகத் தன்னுள்ளே தழுவிக்கொள்கின்றது. இதனெதிர், தன்னையுமே அந்தப் பொருளினுள் செலுத்திவிடுகின்றது; செலுத்தி அதனுடன் ஒன்றாகியும் விடுகின்றது. அகப்பொருளின் 'காட்சி' என்னுந் துறையின் கருத்திதுவே. காண்கின்ற காதலர் இருவரும் கலைஞர்களும் ஆகின்றார். இராமனும் சிதையும் மிதிலையில் கண்கலந்த தன்மையைக் கூறிவரும் கம்பர், "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்பதைத்தெரிவித்து அடுத்தகவியில், "இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினார்" என ஓதி, அதற்கடுத்த கவியில், "ஒருங்கிய இரண்டு உடற்கு உயிரொன்று ஆயினார்" என்றுஞ் செப்புங்கால், கலைமலிந்த தன் காட்சியின் அனுபவத்தையே அக்காதலர்பால் சார்த்திப் பேசினார் என மதிக்க வேண்டும்.

தானென்றும் தன்னால் காணப்படு பொருளென்றும் வேறு பிரித்துப் பார்ப்பதைப் பார்வை என்றும், கண்டதை முழுவதும் உட்கொண்டு, பின் அதனோடு தன்னையுங் கலந்துகொண்டு இறுதியில் காண்பவனும் காணப்படுவதும் ஒன்றாகித் தீர்கின்ற கலைநலத் தனுபவத்தைக் காட்சியென்றும் உரைக்கலாம். இத்தகைய காட்சி வாய்ந்த கலைஞர் தம் அனுபவத்தைத் தெரிவித்திருக்கின்ற சொற்களினின்று அவ்வனுபவத்தின் தன்மையை ஒருவாறு ஊகிக்க இயலும். ஆங்கிலக் கவிகளில் சிறந்த ஒருவராய ஜான் கீட்ஸ் என்பவர், "குருவியொன்று என் சாளரத்திற் கெதிரே வருமாயின், அதனுடைய வாழ்க்கையில் நானுமோர் பங்குகொண்டு தரையிலே கொத்திப் பொறுக்கத் தலைப்படுகின்றேன்" என்று ஓரிடத்தில் எழுதுகின்றார். இதுவன்றோ காட்சி. கண்ட குருவியோடு கலந்துவிடுங்கொள்கை இது. 'தான்' என்பதை இங்குக் கீட்ஸ் தனியே ஒருபுறம் நிறுத்திவிட்டு, காட்சியின் மெய்ம்மையில் முழுவதும் ஈடுபட்டு, அதனோடு இரண்டறக் கலந்து, அதன் உயிரை உயிர்த்து அதன் உருவத்தை உவந்து நிற்கின்ற இணையிலா இன்பத்தின் மேன்மையைக் கலையின் நலத்தினால் எய்தினார். ஒன்றினைக் கண்டவுடன், லார்ட் பைரன் என்பவர் உரைத்த வண்ணம், கலைஞர்களின் "இதயமும் அறிவும் ஆன்மாவும் ஒத்து அசைந்து அதன் அகத்துறை இசையோடு இழைந்து விடுகின்றது." ப்ளோக் என்பவர், "நாம் எதனைப் பார்க்கின்றோமோ அதுவே ஆகி விடுகின்றோம்" என்று விளம்பினார். "புறத்தில் உள்ள பொருள்களுக்கு உண்மையில் என்னின்று புறமாய ஒரு இருக்கை இருக்கின்றதென்று என்னால் எண்ண இயல்வதில்லை. யான் கண்டவைகளெல்லாம் என்னின்று வேறாகாமல் என் சூக்ஷ்ம இயற்கையின் இன்றியமையாதவைகளாகவே தோன்ற அவைகளுடன் நான் உறவு பாராட்டுகின்றேன்" என வோர்ட்ஸ்வோர்த் என்பவர் எழுதுகின்றார்.

இவ்வளவு உணர்ந்த பின், பார்வைக்குங் காட்சிக்கும் உள்ள வேற்றுமையை வேறோர் வகையிற் கூறலாம். பொருளினின்று புறப்பட்ட வொளி நம்முடைய கண்ணில் தாக்க அதனால் அதன் தோற்றத்தை நாம் தெரிந்துகொள்வது பார்வை. இதற்கு மாறாக, நம்மிலிருந்து ஒரு ஒளி சென்று அப்பொருள்களைக் கதுவிச் சூழ்ந்து தோற்றுவிக்கும்வண்ணம் காட்சியாகும். இந்த ஒளியினால் புனையப் பெற்ற அப்பொருளானது, அதன்பின், நம் ஆன்ம விந்தையின் அரும்பெறற் பேறாகி, ராபர்ட் ப்ரிட்ஜஸ் என்பவர் இனிது காட்டிய வண்ணம், "கடவுளின் சித்தத்தின் பழுதற்ற ஸாரமாய்"த் தன்னைத் தெரிவித்துக் கொள்கின்றது. கடவுளின் சித்தத்தின் உருவங்களே பொருள்கள் அனைத்தும், நாம்காண வந்துநிற்கும் அவர் கருத்தின் சித்திரங்களே இவ்வுலகநிகழ்ச்சிகள் அனைத்தும் என்னும் தோற்றம் கலைமலிந்த காட்சியின்முன் நடனம் புரிகின்றது. "மனிதன் பார்ப்பதையோ கலைஞன் கூறுகின்றான் என்று எண்ணுகின்றீர். கடவுள் காண்பதையன்றோ அவனுங் கண்டு நமக்குங் காட்டுகின்றான்" என்று ராபர்ட் ப்ரௌனிங் என்பவர் பூரித்த உள்ளமோடு புகன்றிருக்கின்றார். சான்றோர் கருத்துக்களும் சிருஷ்டியின் வித்துக்களும் கடவுளின் கரங்களில் எவ்வண்ணம் இருந்து பெருகுகின்றன என்பது கலைஞர்தம் காட்சி. இந்தக் காட்சி வாய்த்தவர், நாம் முன்னோர் கட்டுரையில் காட்டியவண்ணம், புதுப்பிறவி யெடுத்தவர். அன்னவர்க்கு இவ்வுலகம் மறுபிறவி எடுத்துத் தன்னைக் காட்சியளிக்கின்றது. பழைய உலகந்தான் இது, ஆயினும் புதியதே. இந்தப் புது உலகத்தில்,—

கூற்ற மில்லையோர் குற்ற மிலாமையால்
சீற்ற மில்லை தம்சிந்தையிற் செய்கையால்
ஆற்ற னல்லற மல்ல திலாமையால்
ஏற்ற மல்ல திழிதக வில்லையே.

இத்தகைய உலகம் இங்கு இப்பொழுதே இருக்கின்றது. அது நமக்குப் புதுப்பிறவி எடுக்கவேண்டும் அவ்வளவே. அது புதுப்பிறவி எடுப்பதென்பதன்பொருள் நாம் புதுப்பிறவி எடுக்கவேண்டுமென்பதே. அப் புதுப்பிறவி என்பதும் பார்வையைக் காட்சியாக மாற்றுவதன்றி வேறன்று. இந்நலம் புரியவல்லது புனிதமாய கலைகளே. ஆதலாற்றான், அமீல் உரைத்தபடி, சுதந்தர சமத்துவ சகோதரத்துவங்களென்னும் பார்வையில் புரள்கின்ற வெற்றுரையாளர் ஆரவாரங்களை அகல விட்டுவிட்டு, இக் கலாநிலயம் கலையுணர்வு கைவரத்தக்க வகைகளில் தன் முயற்சி யத்தனையும் செலுத்திவருகின்றதென்பதை நம் நண்பர்கள் அறிந்திருப்பார்கள் என்றும், அம் முயற்சியில் தமது உதவியையும் அளிப்பார்கள் என்றும் நம்புகின்றோம்.

அப்பர்

அப்பரும் அறுபத்ினான்கு கலைகளும்— 30. வியாகரணம்

[622-வது பக்கத் தொடர்ச்சி]

XII அப்பரும் யாப்பியலும்

(1) அப்பர் திருமுறைகள்

இனி, அப்பர்தேவாரம் பண்டைக்காலத்தியசெய்யுளியலை எவ்வாறு தழுவியிருக்கின்றதென்பதும், சங்கத்தார் காலத்தில் வழங்காத விருத்தங்களை எவ்வாறு நமது இலக்கியத்தில் சமய குரவர்கள் நுழைத்தார்களென்பதும், விருத்தங்களின் இலக்கணங்கள் யாவை யென்பதும், அவற்றின் பண்களின் நோக்கு எவ்வாறு இருக்கலாமென்பதும், தற்காலத்தில்வழங்கும் அவ் விருத்தங்கள் எத்துணைவகை யென்பதும் அப்பர் தேவாரப்பதிகங்கள் வாயிலாக ஆராய்வோம்.

அப்பர் தேவாரம் மூன்று திருமுறைகளாய் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 2-ம் திருமுறை "திருக் குறுந்தொகை" யென்னும் பண் அமைந்துள்ள கலிவிருத்தங்களாம். திருக்குறுந்தொகை யென்பது ஒரு பண்ணோ வென்னும் சங்கை எழக்கூடும். அதை அலகிட்டு நோக்குமிடத்து, பண்டைத்தமிழ்ப் பண்களில் அது ஒன்றென்றே யெண்ணல் வேண்டும். விருத்தப்பாவியல் ஆசிரியர்

சீரியலினா லமைவ தீந்தமிழ் விருத்தம்
ஆரிய மறைந்த வுயர்சந்த வபிதான
வாரியது மாத்திரையினா லமையு மென்ப
பாரிய லமைந்த பதுமத்திரு வணங்கே
சந்தவுறுப்பியல் 1.

என்று கூறுகின்றார்.

திருக்குறுந்தொகைக் கலிவிருத்தங்களின் அமைப்பினை நோக்குமிடத்து அவை ஒருவகையான கட்டளை பெற்று விளங்குகின்றன. முதலசை நேரசையாயின் ஒவ்வொரு அடியில் பதினொன்று உயிர்களும், நிரையசையாயின் பன்னிரண்டுஉயிர்களுமாய் அவ்வடிகள் அமையப்பெறும்.

மாசில் வீணையும் மாலை மதிய மும்
1 2 3 4 5 6 7 8 9 10 11
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

என்னும் யாவரும் அறிந்த உதாரணத்தை நோக்குக. இங்கு முதலசை "மா" நேரசையாதலால், ஒவ்வொரு அடியிலும் உள்ள உயிர் பதினொன்றாம். மற்று நிரையசை முதல்வரும்,

இளமை கைவிட் டகறலு மூப்பினார்
1 2 3 4 5 6 7 8 9 10 11 12
வளமை போய்பிணி யோடு வருதலால்
உளமெ லாமொளி யாய்மதி யாயினான்
கிளமை யேகிளை யாகநி னைப்பனே

இதுகாறும் எனது சகோதரர் பலர் யாப்பிலக்கணத்தை இப்பத்திரிகையில் பல கட்டுரைகளால் விளக்கியுள்ளார். ஆதலால் யாப்பிலக்கண வாய்பாடுகளான தேமா புளிமா முதலியனவும், சீர்வகைகளும் இப்பத்திரிகையை ஓதிவருவோர் தெரிந்துகொண்டிருப்பார் என்னும் நம்பிக்கையை அடிப்படையாய் வைத்துஇக்கட்டுரையை எழுதலாகின்றேன்.

என்பதில் நிரையசை முதல் ஆவதால் பன்னிரண்டு உயிர்கள் ஒவ்வொரு அடியிலு மமைவது காண்க. எனவே அப்பர் பாடிய திருக்குறுந்தொகை ஒருவகைச் சந்த விருத்த வகுப்பென்றே நாம் கொள்ளல்வேண்டும். எனினும், இவ்வகைச் சந்த உட்பிரிவுகளை நாம் இங்கு ஆராயவேண்டிய அவசியமில்லை.

அப்பர் மூன்றும் திருமுறையாகிய ஆறும் திருமுறை முற்றும் திருத்தாண்டக விருத்தங்களாகும். அவை பெரும்பாலும்

"காயிரண்டு, மாவொன்று, தேமா வொன்று
கலந்தவடி யிரட்டிமதன் விகற்பம் காணே"

என விருத்தப்பாவியல் கூறியுள்ள விதியைப் பெற்று விளங்கும்:—

மெய்த்தானத் தகம்படியு ளைவர் நின்று
வேண்டிற்றுக் குறைமுடித்து வினைக்குக் கூடாம்
இத்தானத் திருந்திங்ங னுய்வா னெண்ணும்
இதனையொழி யியம்பக்கே ளேழை நெஞ்சே
மைத்தான நீள்நயனி பங்கன் வங்கம்
வருதிரைநீர் நஞ்சுண்ட கண்டன் மேய
நெய்த்தான நன்னகரென் றேத்தி நின்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே
—திருநெய்த்தானம் - திருத்தாண்டகம் 1.

ஆயினும், சில பதிகங்கள் இத்திருமுறையில் இவ்விதிக்கு உட்படாதன வுள. அவற்றைப் பின்னர் விவரிப்பாம்.

அப்பர் முதல்திருமுறையோ (அதாவது நான்காம் சைவத் திருமுறை) இத்தகைய ஒருவகையான பதிகங்களால் அமையப்பெற்றதன்று. இந்தத் திருமுறையில் நூற்றறுபத்தைந்து பதிகங்கள் (Chapters) இருக்கின்றன. அவற்றுள் 121 முதல் 165 வரையில் உள்ள, 45 பதிகங்கள் திருவிருத்தங்களாம். அவை யாவும் கட்டளைக்கலித்துறை. 36வது பதிகம் முதல் 120-வது பதிகம் வரையில் உள்ள பதிகங்கள் திருநேரிசையாம். இவை சந்தமின்றி நேராக விசை கொடுப்பனவாகி அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய வகையில் ஒன்றும். ஏனைய பதிகங்கள் பல்வகைப் பண்களிற் காணப்படும். அவற்றை ஆராயப்புகுவதன் முன்னர், நமது தமிழிலக்கியத்தில் எத்துணை வகை விருத்தங்கள் வழங்குகின்றனவென்பதும், சந்த விருத்தங்கள் எத்துணைவகை யென்பதும், அவற்றின் இலக்கணம் யாதென்பதும் ஆராய்வோம்.

(2) விருத்தங்களின் வகை

விருத்தங்கள் இருவகை. அவையாவன: சந்தமற்ற விருத்தங்கள் அல்லது சாதாரண விருத்தங்கள் ஒரு வகையாம். சந்த விருத்தங்கள் மற்றொரு வகை. சந்த விருத்தங்கள் எனப்படுவன, இசைத்தமிழிலக்கணத்திற்கும், இயற்றமிழ் யாப்புக்கும் அடங்குவன. சந்தமற்ற விருத்தங்கள் இயற்றமிழ் யாப்புக்கு அடங்குவனவேயன்றி, அவைதாம் இசைத் தமிழ் விதிகளுக்குக் கட்டுப்படுவனவல்ல. சில புலவர்கள், சந்த விருத்தங்கள் சந்தக்குழிப்புப்பெறுமென்றும், ஏனையவிருத்

தங்கள் அது பெறுவென்றும்கூறுவர். இவ்விருபகுதிகளை வேறுபடுத்திக் காண, இதனையும் அறிகுறியாய்க் கொள்ளலாம். ஆயினும் சந்த விருத்தங்களின் இலக்கணத்தைக் காணும்போது அவற்றின் யாப்பும் இசையும் பொருந்தும் முறையைக் கூறுவோம். இப்போது சாதாரணமான தமிழ் விருத்தங்கள் நமது இலக்கியத்தில் வழங்கும் வகையை விருத்தப்பாவியல் ஆசிரியர் கூறிய முறையிற் காண்போம்.:—

I. அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

மனம்போனவாறு வரிசையாய் ஆறு சீர்க்களை அடுக்கினல் அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம் உண்டாகாது. தமிழில் (சந்தமற்ற) அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம் ஏழே வகையாகும். அவையாவன—

(i) விளச்சீர், மாச்சீர், தேமாச்சீர் ஆகிய இந்த மூன்று சீர்களும் கூடிப் பின்னும் ஒருகால் வருகின்ற விருத்தங்களாகும். இதற்கு உதாரணம் அப்பர் திருநேரிசைப் பதிகங்கள். [விள என்று கூறிய இடத்து மாங்காய்ச் சீர் வருதல் மரபு]

வேதியா வேத கீதா
விண்ணவ ரண்ணு வென்றென்
றோதியே மலர்கள் தூவி
யொருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய்
படர்சடை மதியம் சூடும்
ஆதியே ஆல வாயி
லப்பனே யருள்செ யாயே

திருவாலவாய்த் திருநேரிசை 1.

(ii) "இருமா காய்ச்சீர் அரையடிக்காய் இவையே மற்றை யரையடிக்கும்" ஆகி நிற்பன. இதற்கு உதாரணம் அப்பர் பாவநாசத் திருப்பதிகம்; பொது-பண்-பழம்பஞ்சுரம்;திருவாசகத்தில், குழைத்தபத்து முதலியன,

பற்றற் றார்சேர் பழம்பதியைப்
பாசூர் நிலாய பவளத்தைச்
சிற்றம் பலத்தெந் திகழ்கனியைத்
தீண்டற் கரிய திருவுருவை
வெற்றி யூரில் விரிசுடரை
விமலர் கோனைத் திரைசூழ்ந்த
ஒற்றி யூரெம் முத்தமனை
உள்ளத் துள்ளே வைத்தேனே.

பாவநாசத் திருப்பதிகம் 1.

(iii) "முதனன்கும் காயாகிப் பின்னவை மா தேமாவாய்" அமையும்—(உ - ம்) அப்பர் திருவாரூர், பழமொழி, திருக்கழிப்பாலை பண் காந்தாரம் முதலிய பதிகங்கள்.

ஓட்டாத வாளவுணர் புரமூன்று
மோரம்பின் வாயின் வீழக்
கட்டானைக் காமனையுங் காலனையுங்
கண்ணினொடு காலின் வீழ
அட்டானை யாரூரி லம்மானை
யார்வச்செற் றக்கு ரோதம்
தட்டானைச் சாராதே தவமிருக்க
அவஞ்செய்து தருக்கி னேனே

திருவாரூர் - பழமொழி - பண் காந்தாரம் 9.

(iv) குறிய வீற்று மாச்சீ ரொன்றுங், கூவிளச்சீ ரொன்றும், விளச்சீர் மூன்றும், காய்ச்சீ ரொன்றுமாய் வருதல். இதற்கு உதாரணம், திருவாசகம் அதிசயப்பத்து அற்புதப்பத்து முதலியன. இப்பகுதியில் அப்பர் தேவாரத்தில் உதாரணம் காணப்படவில்லை.

நீதி யாவன யாவையு நினைக்கிலேன்
நினைப்பவ ரொடுங்கூடேன்
ஏத மேபிறந் திறந்துழல் வேன்றனை
யென்னடி யானென்று
பாதி மாதொடுங் கூடிய பரம்பர
னிரந்தர மாய்நின்ற
ஆதி யாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டோமே

அதிசயப்பத்து 2.

(v) ஒன்று, மூன்று, ஆறு ஆக வரும் சீர்கள் மாச்சீராயும், இரண்டு, நான்கு, ஐந்து ஆக வருஞ்சீர்கள் விளச்சீராகவும் வருதல். இதற்கு அப்பர் தேவாரத்தில் உதாரணம் காணப்படவில்லை.

(vi) மாச்சீராகிய அந்தத்தையும், விளச்சீரும் மாச்சீரும் வெண்டளையிற் புணரப் பெற்றதையு மிரண்டு பாதியிலு முடையது (திருவாசகம்-குயிற்பத்து இவ்வகையைச் சார்ந்தது) இதற்கு அப்பர் தேவார உதாரணம்:—

பாடிளம் பூதத்தி னானும்
பவளச்செவ் வாய்வண்ணத் தானும்
கூடிள மென்முலை யாளைக்
கூடிய கோலத்தி னானும்
ஓடிள வெண்பிறை யானும்
ஒளிதிகழ் சூலத்தி னானும்
ஆடிளம் பாம்பசைத் தானும்
மாரூ ரமர்ந்தவம் மானே

அப்பர்—திருவாரூர் - பண்-காந்தாரம் 1.

[குறிப்பு:—இதிலுள்ள வெண்டளையை நோக்குக. விளத்திற்குப்பதில் விள மில்லாக் காய்ச்சீர்வருவதும் மரபு]

(vii) ஐந்து மாச்சீரும் ஒரு காய்ச்சீருமாய் வருதல்:—

பாரோர் விண்ணோர் பரவி
யேத்தும் பரனே பரஞ்சோதி
வாராய் வாரா வுலகந்
தந்து வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித்
திரிந்தெம் பெருமா னெனவேத்த
ஆரா வமுதே யாசைப்
பட்டேன் கண்டா யம்மானே.

ஆசைப்பத்து - திருவாசகம்.

இதற்கு அப்பர் தேவாரத்தில் உதாரணம் இல்லை. ஆக, அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தங்கள் வழங்குவன ஏழேயாகும். எட்டாவது வகையாக மற்றொன்றைத் தற்காலத்திய புலவர் ஒருவர் பாடுவாராயின் இது விருத்தமன்று என நீக்குவதே தமிழ் மாணவர் கடனும். சந்தமற்ற அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம் பாடுவதாயின், தமிழ்மாணவர் மேற்கண்ட எழு வகை விருத்த வரம்புக்குள் பாடலாமேயன்றி, மனம் போன போக்காய்ச் சீர்களை அடுக்கி, இது அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம் என்று கூறலாகாது என்பதைக் கவனித் துணர்வாராக.

தமிழ்ப்பாடம் 86.

அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்துமாலை

[649-வது பக்கத் தொடர்ச்சி]

மாதண்ட மேவுங் கரத்தா ரரங்கர் வடமிதிலைக்
கோதண்ட வேகம் பிறப்பித்த போது குவட்டு
[வெள்ளி
வேதண்ட மேய மழுவாளி நாணினன் வென்றிகண்டு
மூதண்ட மஞ்சு மழுவாளி கோப முதிர்ந்ததுவே. 8.

பதப்பிரிவு:—மா தண்டம் மேவும் கரத்தார் அரங்கர் வட மிதிலை கோதண்ட வேகம் பிறப்பித்த போது குவடு வெள்ளி வேதண்டம் மேய மழு ஆளி நாணினன் வென்றி கண்டு முதுமை அண்டம் அஞ்சும் மழுவாளி கோபம் முதிர்ந்து ஏ.

பதவுரை.

மா - பெரிய, தண்டம் - தண்டாயுதம், மேவும் - பொருந்திய, கரத்தார் - கையை உடையவராகிய, அரங்கர் - ஸ்ரீரங்கநாதர் (இராமாவதாரத்தில்), வட மிதிலை - வடக்கிலுள்ள மிதிலை நகரத்திற்குச் சென்று, கோதண்டம் - சிவனுடைய வில்லை முறித்த, வேகம்- வேகமான பேரொலியை, பிறப்பித்தபோது - உண்டாக்கியபொழுது,

வென்றி - அந்தப் பராக்கிரமத்தை,கண்டு-பார்த்து, குவடு - சிகரத்தையுடைய, வெள்ளி வேதண்டம் - வெள்ளிமலையெனும் கைலாசத்தில், மேய - தங்கிய, மழுவாளி - பழுக்கக் காய்ச்சிய இருப்பு ஆயுதத்தையுடைய சிவபிரான், நாணினன் - வெட்கங் கொண்டனன்.

முதுமை-பழமையாகிய, அண்டம் - இப்பூவுலகம், அஞ்சும் - பயப்படும்படியான, மழுவாளி - கோடாலிப் படையுடைய பரசுராமனது, கோபம் - கோபம், முதிர்ந்தது - மிகுந்தது.

கருத்து:—ஸ்ரீ இராமபிரான் மிதிலையில் வில்முறித்த வோசை நாற்றிசையிலும் பரவியபோது, கைலாசத்திலிருந்த சிவன் அதனைக் கேட்டுத் தான் கையாண்டதுவை இவ்வளவு எளிதில் ஒருவன் முறித்துவிட்டானே என்ற நாணமும், மன்னவர் குலமெலாம் இருபத்தொரு தலைமுறை வென்றழித்துப் பின் சகியமென்னும் மலையில் சென்று தவஞ்செய்திருந்த பரசுராமன் அவ்வொலியைக் கேட்டவுடன் இத்தகைய ஆற்றலுடைய க்ஷத்திரியனொருவன் இன்னும் இருக்கின்றானே வென்ற சினமும், கொண்டனர் என்பது இந்தச் செய்யுளில் அடங்கிய விஷயம்.

விரிவுரை:—கார்த்தவீர்யார்ச்சுனனைப் பரசுராமன் கொன்றசெய்தி முன்செய்யுளில் கூறப்பட்டிருக்கின்றது. இச் செய்யுளில் தசரதராமன்பால் பரசுராமன் சினம்கொண்டதைக் கூறிப் பரசுராமன் தயரதராமனால் தோல்வியுற்றதையும் கவி குறிக்கின்றார். பரசுராமனும் தயரதராமனும் இருவரும் திருமாலினுடைய அவதாரங்களாயிருக்க, அவர்கள் ஒரே காலத்தவரானதுமன்றி ஒருவரையொருவர் எதிர்த்துப் போருஞ் செய்தனர் என்பது வியப்பு விளைவிக்கலாம். அப்படியே கண்ணனும் பலராமனும் ஒரேகாலத்து அவதாரங்கள். அதுவுமன்றிக் கார்த்தவீர்யார்ச்சுனனுமே திருமாலின் அவதாரந்தான். ஆயின், கார்த்தவீர்யார்ச்சுனனைப் பரசுராமன் கொல்வதும், பரசுராமனைத் தயரதராமன் வெல்வதும், திருமால் தன்னையே கொல்வதும் வெல்வதும் செய்துகொள்வதுபோல் தோன்றுகின்றன.

இதற்குக்காரணம், நமது சாஸ்திரங்களில் திருமாலினுடைய அவதாரங்களின் இலக்கணத்தை விளக்கியிருப்பதிலிருந்து அறியலாம். அவதாரங்கள், அம்சாவதாரம் என்றும் ஆவேசாவதாரம் என்றும் இருபெரும் பிரிவின. அம்சாவதாரம் என்பது திருமால் தானே நேராக வந்து உலகில் அவதரிப்பது. இதனைஸாக்ஷாத் அவதாரம் என்றும் சொல்வர். பத்து அவதாரங்களில் பரசுராமாவதாரமும் பலராமாவதாரமும் தவிரமற்ற எட்டுஅவதாரங்களும் அம்சாவதாரமென்னும்ஸாக்ஷாத் அவதாரங்கள் ஆகும். ஆவேசாவதாரம் என்பது பகவான் நேராக வந்து அவதரிக்காமல், மற்றவருடைய சரீரங்களில் தன்னுடைய சக்தியை ஆவேசம் செய்திருத்தல். இது ஸ்வரூபாவேசம் என்றும் சக்தி ஆவேசம் என்றும் இருவகைப்படும். ஸ்வரூபாவேசம் என்பது, பகவான் தன்னுடைய ரூபத்தோடு மற்றவர் சரீரத்தில் சேர்ந்திருப்பது; சக்தியாவேசம் என்பது தன்னுடைய சக்தியை மாத்திரம் மற்றவர் சரீரத்தில் சேர்த்திருப்பது ஆகும். பரசுராமனும் பலராமனும் ஸ்வரூபாவேசாவதாரங்கள்; கார்த்தவீர்யார்ச்சுனன் பாண்டவார்ச்சுனன் வியாசன் முதலானவர்கள் சக்தியாவேசாவதாரங்கள். இவ்விருவகையிலும் பகவான் மற்றவர் சரீரத்தில் ஆவேசம் செய்வது, தன்னுடைய கருமத்தை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டாம். அக்கருமம்முடிந்ததும்ஆவேசத்தைநீக்கிக் கொண்டுவிடுவார். க்ஷத்திரியனது தொழிலாகிய காத்தல்தொழிலைப் புரியும்பொருட்டுக் கார்த்தவீர்யார்ச்சுனனிடம் திருமாலினது சக்தி ஆவேசம் செய்திருந்தது. பின் அடக்குவாரில்லாமல் செருக்கியிருந்த க்ஷத்திரியரை அழிக்கும்பொருட்டுப் பரசுராமனிடம் ஸ்வரூபாவேசமானார். அக்காரியம் முடிந்தபின் பகவான் ஸாக்ஷாத் அம்சாவதாரமான தயரதராமனாக வந்து பரசுராமனிடத்திலிருந்த தன் ஆவேசத்தை வாங்கிக் கொண்டுவிட்டார். இதுவே இவ் வவதாரங்களின் பொருளாம்.

—

ஒருதா யிருந்து வருந்த வைதேகி யுடன்சுரத்தி
லொருதாய் சொலச்சென்ற தென்னரங் காவைய
[முய்யும்வண்ண
மொருதா யுதரத்தி லோரறு திங்க ளுறைந்தபின்னை
யொருதாய் வயிற்றில்வந் துற்றதெம் மாய முரைத்
[தருளே. 9.

பதப்பிரிவு:—ஒரு தாய் இருந்து வருந்த வைதேகி உடன் சுரத்தில் ஒரு தாய் சொல சென்ற தென் அரங்கா வையம் உய்யும் வண்ணம் ஒரு தாய் உதரத்தில் ஓர் அறு திங்கள் உறைந்த பின்னை ஒருதாய் வயிற்றில் வந்து உற்றது எ மாயம் உரைத்து அருள் ஏ.

பதவுரை.

ஒரு தாய் - பெற்ற தாயாகிய கௌசலை, இருந்து - அயோத்தியிலேயே இருந்து, வருந்த - வருந்தும்படி, ஒருதாய் - மாற்றாந்தாயாகிய கைகேயி, சொல-சொன்னதற்கு உடன்பட்டு, வைதேகியுடன் - சீதாபிராட்டி

யுடன், சாத்தில் - கொடிய காட்டிற்கு, சென்ற - போன, தென் - அழகிய, அரங்கா - ஸ்ரீரங்கநாதனே, வையம் - இப்பூமியானது, உய்யும் வண்ணம் - துயர்நீங்கி வாழும்பொருட்டு, ஒரு தாய் - தேவகியாகிய உன் ஒரு தாயினது, உதரத்தில் - வயிற்றில், ஓர் அறுதிங்கள் - ஒரு ஆறுமாசகாலம், உறைந்தபின்னை - இருந்தபிறகு, ஒரு தாய்-மற்றைய தாயாகிய ரோகிணியின், வயிற்றில் - வயிற்றில், வந்து - வந்து, உற்றது - கருவாகச் சேர்ந்தது, என்ன மாயம் - என்னமாயம் என்று, உரைத்தருள் - நீயே சொல்லியருள்வாயாக.

கருத்து:—இது பலராம அவதாரத்தைக் குறிக்கின்றது. தேவகி வயிற்றினில் கருவாக ஆறுமாதம் வளர்ந்தபின் அதைவிட்டுப்போய் ரோகிணியின் கருவாகச் சேர்ந்து நீ பலராமனைப் பிறந்த மாயத்தை எனக்குச் சொல்லியருள்வாயாக, என்பது இந்தச் செய்யுளின் கருத்து.

உன்னைக் களவி லுரலோடு கட்டிவைத் துன்னுடைய
அன்னைக் கொருத்தி யறிவித்த போதலை யாழிமங்கை
தன்னைப் புணர்ந்தரு டாரரங் காவவ டன்மருங்கிற்
பின்னைக் கொடுசென்ற பிள்ளைமற் றாரென்று பேசு
[கவே. 10.

பதப்பிரிவு:—உன்னை களவில் உரலோடு கட்டிவைத்து உன்னுடைய அன்னைக்கு ஒருத்தி அறிவித்தபோது அலை ஆழி மங்கை புணர்ந்து அருள் தார் அரங்கா அவள் தன் மருங்கில் பின்னை கொடுசென்ற பிள்ளை மற்று ஆர் என்று பேசுக ஏ.

பதவுரை

அலை - அலைகளையுடைய, ஆழி - கடலில் தோன்றிய, மங்கை - திருமகளை, புணர்ந்து அருள் - புணர்ந்தருள்கின்ற, தார் - மாலையையணிந்த, அரங்கா - ஸ்ரீரங்கநாதனே, (கிருஷ்ணாவதாரத்தில்)

ஒருத்தி-ஒரு இடைச்சி, களவில்-நீ பாலுந் தயிருந் திருடியகாலத்தில், உன்னை - உன்னை, உரலோடு - உரலோடு, கட்டிவைத்து-கட்டிவைத்து, உன்னுடைய- உன்னுடைய, அன்னைக்கு - தாயாகிய யசோதைக்கு, அறிவித்தபோது - உன் திருட்டைப் போய்த் தெரிவித்தபோது, அவள் - அந்த இடைச்சி, தன் - தன்னுடைய, மருங்கில்:- இடுப்பில், கொடுசென்ற - எடுத்துக்கொண்டுசென்ற, பிள்ளை - பிள்ளைதான், மற்று - வேறு, ஆர் என்று - யாரென்று, பேசுக - சொல்வாயாக.

விரிவுரை: —மாமாயனுயவதரித்தகண்ணபிரானது இளம்பருவ விளையாட்டுக்களில் ஒன்றைக் குறிக்கின்றது இந்தப் பாசுரம். கண்ணன் புகுந்து தம்மனையில் நெய் பால் தயிர் வெண்ணெய்களைக் களவாடுகின்றானென்று கோவியர்கள் யசோதைக் கெவ்வளவுரைத்தாலும் அவள் நம்பாதிருத்தலைக்கண்டு கையுங்களவுமாகக் காட்டவேண்டுமெனக் காத்திருந்த இடைச்சிகளில் ஒருத்தி, உரல்மேலேறி உறியினின்று திருடிக்கொண்டிருந்த கண்ணனைப் பிடித்து அவ் வுரலோடு கட்டிவைத்துவிட்டு, யசோதையை அழைத்து வந்து காட்டவேண்டுமென்று புறப்பட்டவள் தன்னுடைய பிள்ளையைத்தூக்கித்தன் இடுப்பில்வைத்துக்கொண்டு போய் யாவையும்சொல்லி அவளை வந்துபார்க்கும்படி அழைக்க, அப்பொழுது கிருஷ்ணன் தன்னுடைய மாயையினால்: அவள் இடுப்பிலிருந்த பிள்ளை தானேயாகவும், உரலில் கட்டியிருந்த பிள்ளை அவளுடைய பிள்ளையாகவும் மாற்றிக்கொண்ட வரலாற்றை வைத்துக் கவி இவ்விதம் அழகாகப் பாடியிருக்கின்றார்.

இலக்கணம்.

நிலைமொழி இறுதியில் மெய்யெழுத்தும் வருமொழி முதலில் உயிரெழுத்தும் வந்து புணர்கின்ற இலக்கணத்தைப் பார்த்து முடித்தோம். இனி, நிலைமொழிஇறுதி வருமொழிமுதல் ஆகிய இரண்டிடத்தும் உயிரே இருக்குமானால் அவை எவ்வாறு புணரும் என்பதைப் பார்ப்போம்.

நிலைமொழியிறுதியில் உயிர் இருப்பதென்றால், அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ என்ற எழுத்துக்கள் அப்படியே இருக்கவேண்டும் என்று எண்ணப்படாது. நிலைமொழி ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என்ற ஓரெழுத்து ஒருமொழியாகவாவது, அ இ உ என்னும் சுட்டெழுத்தாகவாவது, எ என்னும் வினாவெழுத்தாகவாவதுதான் உயிரெழுத்து உயிரெழுத்தாகவே, வருமொழிமுதலில் வருகின்ற உயிரிற்கு முன்னே நிற்கக் கூடியதாகும். மற்றபடி ஈற்று உயிர் என்று சொல்லும்போது நிலைமொழியிறுதியிலுள்ள உயிர்மெய் எழுத்தின் இறுதியில் ஒலிக்கின்ற உயிர்ஒலியே யாகும்.

எழுத்துக்களுக்கு இரண்டு வடிவங்கள் இருக்கின்றன. ஒன்று ஒலிவடிவம்; அதாவது, அவ்வெழுத்து உச்சரிக்கப்படும் ஓசை. மற்றது வரிவடிவம்; அதாவது, அது எழுதப்படும் உருவம். அ, க், பா, என்ற எழுத்துக்களை நாம் உச்சரிக்கும்போது அவை தத்தமக்கு உரிய ஒலிவடிவங்களோடு தோன்றுகின்றன; அவைகளை நாம் எழுதும்போது அவ்வோசைக்கு அறிகுறியான வரிவடிங்களைத் தருகின்றோம். அ, ஆ முதலான பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள்; அவை ஒவ்வொன்றிற்கும் இருக்கின்ற ஒலி ஒவ்வொன்றே. ஒலியுருவம் எதுவாயிருந்தாலும்இவ்வுயிரெழுத்துக்களில், அ இ உ எ ஒ, என்ற ஐந்து குறில்களின் உச்சரிக்கும் அளவு, அல்லது மாத்திரை எனப்படுவது, ஒன்று. அதாவது, ஒருதரம் கைநொடித்தல் அல்லது கண்ணிமைத்தல் செய்யும் நேரத்தினளவுதான் அந்த உயிர்க்குறில் எழுத்தொன்றை உச்சரிப்பதற்கு வேண்டியிருக்கும். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ, என்ற உயிர்நெடில்கள் ஒவ்வொன்றும் அவ்விதமே இரண்டு மாத்திரை பெறும். க் ங் முதலிய பதினெட்டு மெய்யெழுத்துக்களுக்கும் ஒலிவடிவத்தில் உள்ள அளவு அல்லது மாத்திரை அரை. அதாவது ஒருதரம் கைநொடிப்பதற்குள் அல்லது கண் இமைப்பதற்குள் இரண்டு மெய்யெழுத்துக்களை நாம் உச்சரித்துவிடக் கூடும்.

இனி, க கா கி கீ கு கூ என்று க முதல் ன ஈறுக உள்ள பதினெட்டு வரிசைகளில், வரிசைக்குப் பன்னிரண்டாக அமைகின்ற இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்யெழுத்துக்களின் வரிவடிவின் தன்மையை நன்றாக அறிவோம். ஆனால், அவைகளின் ஒலிவடிவின் தன்மையை இப்புணரிலக்கணத்தின் பொருட்டுச் செவ்வனே உணரவேண்டும். க ஙா கி ஞீ டு ணூ தெ நே பை மொ யோ ரௌ, வென்பனபோன்ற உயிர்மெய்யெழுத்துக்களை உச்சரித்துப் பார்ப்போமானால் அவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஓரே எழுத்து ஆனாலும் மெய்யின்ஒலி உயிரின்ஒலி ஆகிய இரண்டு ஒலி

களும் கலந்துவரக் காணலாம். க்+அ,=க, அல்லது ப்+இ=பி, அல்லது, ட்+ஊ=டூ, என்று உயிர்மெய்யெழுத்துக்கள் ஆவதால், அவை முதலிலே க் ப் ட் என்ற மெய்யெழுத்துக்களின் ஒலியையும், பின் அ, இ, ஊ என்ற உயிரெழுத்துக்களின் ஒலியையும் உடையவைகளாகின்றன. ஒலிவடிவில் மெய்யினொலி உயிரினொலி ஆகிய இரண்டு ஒலிகளையும் பெற்றிருந்தாலும், உயிர்மெய்யெழுத்துக்களும், அ, ஆ போன்ற உயிரெழுத்துக்களையும், க் ங் போன்ற மெய்யெழுத்துக்களையும் போலவே ஒரு தனிவகை எழுத்துக்களாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், உயிரின் ஒலியும் மெய்யின்ஒலியும் பிரிந்து இசைத்தாலும், அளவு அல்லது மாத்திரையில் அவையிரண்டும் தனித்து நில்லாமல் ஒன்றாகிவிடுகின்றன. ச, என்று உச்சரிக்கும்போது, அதற்கு ச் என்னும் மெய்யின் மாத்திரை அரையும்,அ, என்னும் உயிரின் மாத்திரை ஒன்றும், ஆக ஒன்றரை மாத்திரைக் கால அளவு அந்தச் ச என்னும் உயிர்மெய்யெழுத்து உச்சரிக்கப்படுவதில்லை. அதற்கு அமைந்த மாத்திரை ஒன்றுதான். அதாவது, அ, என்னும் உயிரின் மாத்திரை ஒன்று இருக்க, ச் என்னும் மெய்யிற்குரிய அரை மாத்திரை தன்னுடைய அளவு அழிந்து அதனுடன் ஐக்கியமாகின்றது. அப்படியே ஈ என்ற உயிர்நெடிலை உச்சரிப்பதற்கும், தீ என்ற உயிர்மெய் நெடிலை உச்சரிப்பதற்கும் வேண்டியது உயிர்நெடிலிற்குரியமாத்திரையாகிய இரண்டே அன்றி த் என்னும் மெய்யிற்குரிய மாத்திரை அரையும்சேர்ந்து இரண்டரை ஆவதில்லை. உயிரும்மெய்யும் ஒலியாமல்மாத்திரம் பிரிந்துதோன்றி அளவால் அதிகப்படாமல் கலந்து உயிர்மெய்யெழுத்தாவதற்குப் பாலில் சர்க்கரை கலப்பதை உதாரணம் கூறலாம். பாலிலே சர்க்கரை போட்டுக் கரைத்தால், பாலின் சுவை சர்க்கரையின் சுவை ஆகிய அவ்விரண்டின் சுவையும் அக்கலவைக்கு இருக்குமாயினும், கரைந்த சர்க்கரையின் அளவினால் அந்தப்பால் அதிகப்படுவதில்லை. எனவே அளவினால் உயிர்மெய்யெழுத்துக்கள் தனிவகையில் ஒன்றேயாயினும் புணரிலக்கணம்வரையில் அதன் ஒலியை இரண்டாகவே கருதி விவகரிக்கவேண்டும்.

உயிர்மெய்யெழுத்து என்று, உயிரை முதலும் மெய்யைப் பின்னுமாக வைத்து இவ்வெழுத்துக்களுக்குப் பெயரிட்டிருந்தாலும் க்+அ=க என்று ஒலி தொடர்கின்ற முறைப்படி பார்த்தால், மெய்யின் ஒலி முதலிலும் உயிரின் ஒலி பின்னுமாகவே வரக் காண்கின்றோம். ஆதலால், காடி அல்லது குதிரை, பலா, என்ற சொற்களின் ஈற்றில் இருப்பது வரிவடிவில் டி, ரை, லா என்ற உயிர்மெய்யெழுத்துக்களானாலும், அவ் வுயிர்மெய்யெழுத்துக்களின் ஈற்றில் ஒலிக்கும் ஒலி காட் இ, குதிர் ஐ, பல் ஆ, என, இ ஐ ஆ என்னும் உயிரேயாகும். எனவே ஈற்றில் வரிவடிவில் உயிரெழுத்துக்கள் இல்லையானாலும், ஈற்றில் இசைக்கின்ற உயிரின் ஒலியைக்கருதி, அச்சொற்களை உயிர்மெய் ஈற்றுச்சொற்கள் என்னாது, உயிரீற்றுச் சொற்கள் என்றே கூறுவோம். அப்படியே, நாய் அல்லது பூனை, அல்லது மரம், என்னும்போது இச்சொற்களை மெய்யை முதலாக உடைய சொற்கள் என்போம். ஏனெனில், நா என்னும் முதலெழுத்து வரிவடிவில் மெய்யெழுத்தல்லாமல் உயிர்மெய் எழுத்தேயாய் இருந்தபோதிலும் அதில் ந் ஆய் என முதலில் ஒலிப்பது ந் என்னும் மெய்யின் ஒலியாயிருத்தலால் அது மெய்ம்முதற் சொல் லாகின்றது. அவ்வாறே பூனை, மரம் என்ற சொற்களிலும் ப், ம் என்ற மெய்யினொலியே முதலாக இசைக்கப்பெற்று அப்புறந்தான் ஊ, அ என்ற உயிரினொலிகள் வருகின்றன.

வரிவடிவில், க், ங் போன்ற மெய்யெழுத்துக்கள் ஒன்றுகூட ஒருபோதும் தமிழில் மொழிக்கு முதலில் வரவே வராது. ஆகையால் மெய்யை முதலினுடையசொல், அல்லது நிலைமொழியின் முதலில் மெய் வருவது, என்று சொல்லும்போதெல்லாம் மெய்யினொலியை நினைத்துக்கொள்ள வேண்டுமே யொழிய அதன் வரிவடிவைத் தேடப்படாது. வரிவடிவில் தமக்குரிய ஒலியோடும் சொல்லுக்கு முதலெழுத்தாக நிற்கவல்லன, அரசன், ஆடு, இதழ், ஈட்டி என உயிரெழுத்துப் பன்னிரண்டும், சில உயிர்மெய்யெழுத்துக்களும் ஆகும்.

சொல்லுக்கு இறுதியில் வரிவடிவில், கதவு காடி குதிரை, நரு, என உயிர்மெய்யெழுத்துக்கள் பல நிற்கும். கண், மரம், நாய், பகல், என மெய்யெழுத்துக்கள் பல தமக்குரிய ஒலியோடு மொழிக்கு இறுதியில் நிற்கலாம். ஆயினும், முன்சொன்னபடி உயிர்மெய்யெழுத்தின் பின்ஒலியாக உயிர் மொழிக்கு இறுதியாக வருமேயன்றி, வரிவடிவில் தனக்குரிய ஒலியோடே எழுத்தாக ஒருபோதும் வராது.

அமீல்

[654-வது பக்கத் தொடர்ச்சி]

பிரபஞ்சத்தின் மறைபொருளை ஒருவாறு புலப்படுத்துவது மதமாகும். ஒவ்வொருஆன்மாவுள்ளும் மதவுணர்ச்சி இயற்கையாக எழுகின்றது; தத்வஞானமோ எனின், கல்வி விசாரிப்பு உற்றுராய்தல் முதலியவைகளின் மூலமாக உண்டாகிச் செழிக்கின்றது. கர்மத்தில் பிரவிர்த்திக்கச் செய்வது மதமாகும்; தியானத்தில் தோய்ந்து அமைவுற்றிருக்கச் செய்வது தத்வ ஞானத்தின் குணுதிசயம்.

கொடியமிருகங்கள்போன்ற பாசங்களைஒவ்வொரு மனிதனும் வசப்படுத்த வேண்டும்; அதன் கூரிய பற்களையும் நகங்களையும் பிடுங்கி யடக்கி ஊழியர்கள் ஆகும்படி பழக்குவதுதான் கல்வியின் கருத்தும் உபயோகமும் ஆகும்.

அன்பு அநுராகம், ஜனனமரணம்,பக்தி தியாகம், சீர்மை, அகண்டம், அனந்தம், நித்யத்வம், முதலாயினவைகளை உணர்த்தி, உண்மையை அறிவித்து, தெய்விகச் சக்தியால் நிரப்பி, மேலுயர்த்துவதுதான் மெய்யாய காவியங்களின்-உயர்ந்த கலைகளின்-குணுதிசயம் போலும்.

எல்லாவற்றையும் ஸ்பஷ்டமாக அறிந்து, பரிபூர்ண ஞானம் பெற்றபின்தான் செயல்களில் பிரவிர்த்திக்க வேண்டுமெனக் கருதுபவன் உலகவாழ்க்கைக்கு அருகனல்லன். ஐயமும் விசாரிப்பும் ஞானத்தின் வளப்

பத்திற்குப் பிரதானமானாலும், சதாகாலமும் ஐயுற்றுச் சோதித்து விசாரித்தலிலேயே மனத்தைச் செலுத்திக் காலத்தைப்போக்குதல் மதித்தற்கான இலக்ஷிய மன்று. ஞானமாகிய சிகரத்துட் செலுத்தும் படிகள் ஆவன வாணாட்கள்; அவற்றுள் ஐயமும் பரியாலோசனையும் முதற்படிகள்.

மாந்தரனைவர்க்கும் பொதுவாகச் சிற்சில உணர்வுகளும் வேட்கைகளும் கர்மங்களும் இருக்கின்றன. அவைகளுடன், அவர்களைப் பிரித்து வழக்கிடச்செய்யும் விசேஷ குணங்களும் சில உள. அவையாவன, மதமும் சுதேசப்பற்றும், மொழிவளப்பமும், கல்வி வழியும் இலக்ஷியமுமாம். பின்னவைகளும்மானுடர்க்குப் பொதுவானவைகளே அல்லவோ எனச் சிலர்கேட்கலாம். அன்று; மனிதர்களுக்குள் அபிப்பிராய பேதத்தை உண்டுபண்ணிச் செழிக்கச்செய்வது வாழ்க்கையைப்பற்றி அவர்கள் கொண்டுள்ள கருத்து கற்பனை அல்லது ஆதர்சமாகும். மானுடர்க்குள் வித்தியாசம் அல்லது வேற்றுமை என்கின்ற அகழிமை அவர்களுடைய சிந்தனைகளும் அச்சிந்தனையால் தோன்றும் தாரதரங்களுமே தோண்டி விரிக்கின்றன. ஒரே குடும்பத்தினராயினும், ஒரே அறையில் ஒரே கூரையின் கீழ் வசிப்பவராயினும், அவர்களிலொவ்வொருவரும் வெவ்வேறு விஷயங்களையும் நோக்கங்களையும் கொள்கைகளையும் உடையவர்களாகி ஒழுகுவதை அறியாதவரில்லை. இவ் வித்தியாசத்திற்குக் காரணம் மேற்சொல்லியவைகளே யாம்.

சுயகுண வொழுக்கங்களுடன் தான் விளங்கும்படி ஏகாந்தனாக வசிக்க விருப்பமில்லையாயினும், அல்லது இயலாதாயினும், பிறர் நடையுடை பாவனைகளையும் விதி விலக்குக்களையும் அனுவளவேனும் விடாது பற்றித் தொடரவேண்டும்.

ஒவ்வொருமதத்தின் மாண்பும், அவ்வம்மதத்தால் அறிந்து பிரஸ்தாபிக்கப்படுகிற தெய்வப் பிரார்த்தனைகளின் (prayers) தன்மையைப் பொறுத்துள்ளது. தொழுதற்கான கடவுள் ஒருவர் உளரோ,—அவரை ஆராதித்தற்குஉரிய நல்வழி யாதோ, வணங்குதலால் எத்தகைய நன்மை உண்டாகுமோ, என்ற சந்தேகங்களால் பீடிக்கப்பட்டு எவ்வித வந்தனை வழிபாடுகளிலும் பிரவிர்த்திக்காமல் இருந்துவிடுபவனது வாழ்க்கை துக்கம் நிறைந்ததாகும்.

சதாகாலமும் என் கொள்கைகள் மாறிக்கொண்டிருப்பினும், ஜகத் பிதா ஒருவன் உளன் என்ற விஷயத்தையும், ஆன்மாவின் நித்யத்வத்தையும் பரிபூர்ணமாக நம்பியுள்ளேன்; தூய்மை நேர்மை பொறுமை பக்தி கடமை தேவாராதனைகளின் நற்பயன்களை நம்பியுள்ளேன்; ஒவ்வொருவனும் இவ்வாறு விசுவசித்துத் தக்கபடி ஒழுகுவானாயின், சிற்சில சமயங்களில் உகை வாழ்க்கைக்கு இயல்பான துயரங்களால் தாக்கப்பட்டுத் துடிப்பினும், இறுதியிலே மனச்சாந்தியடைந்து ஆனந்திப்பான் என்பதையும்நம்பியுள்ளேன்.

காவியங்களும், தியானமும், சமநோக்கமும், தயையுமேதான் ஆன்மாவைச் சுயம் பிரகாசத்துடன் ஒளிரச்செய்வன; அவைகளின் மூலமாகத்தான் பிரபஞ்ச முறைமையையும் வாழ்க்கைப் பயனையும் உணர்ந்து அறிதற்கு இயலும்; விசுவாசமும் உற்சாகமும் வெற்றியும் அவைகளினாற்றான் வலிமை பெறுவன.

காலதேச வர்த்தமானங்களுக் கப்பாற்பட்ட மெய்யாய வித்தகத்தின் மாண்பை எடுத்துரைக்க வல்லவர் எவர்? உலகாதிகளின் ஒற்றுமையையும் சீரையும் எழிலையும், ஜீவனுடைய போக்கையும் கருத்தையும் உள்ளபடி உணர்த்துவது ஞானமாகும். இளமை கழிந்து மூப்புப்பருவம் எய்தி வருந்தலாம்; ஆரோக்கியங்கெட்டு அவதிகளுக் குள்ளாகலாம்; இன்பம் துன்பமாகவும், களிப்பு அழுகையாகவும் மாறலாம்; எனினும், ஜீவகோடிகள் அனைத்தும் கடவுளின் அம்சங்களெனவும், அக் கடவுளை நாடியே இயங்குவனவெனவும், மற்று அக்கடவுளை ஆதர்சமாகக்கொண்டு தம் வாணாளைச் செலுத்துவன வென்றும் நம்புவோமாயின், கவலையுறவேண்டியதில்லை.

புனிதமாய நித்தியவாழ்க்கை என்பது இறந்தபின் நிகழ்வதன்று; ஸ்வர்க்கம் என்பது இவ்வுலகிற்கு அப்பாலுளதன்று. ஈசனது அருள்பெற்றுமெய்ந்நெறியையொட்டி யொழுகலே தூய நித்ய வாழ்க்கையாகும்; இப்பொழுதே இவ்விடமே அவ்வாழ்க்கை நடத்தப்படுவதாம்.

சமத்வமும் சகோதரத்துவமும் புல்லறிவினரால் பொருளற்ற சொற்களாகத் தாழ்த்தப்பட்டு நிற்கின்றன. உள்ளே பூரித்துவளர்கின்ற கொடிய துவேஷமானது அன்பு என்ற போர்வை போர்த்து, சமத்வம்-சகோதரத்வம்-ஒற்றுமை-சுதந்திரம்என்னும்பேரொலி முழக்குடன் பெரும்பாலோரைக் கலக்கிவருகின்றது! காரிய வுலகை யொட்டியவரையிலும், உண்மையில், அம்மொழிகள் கயவர்களின் ஆரவாரங்களே. நடுநிலை தவறாமல் நடப்பவர் மேற்சொல்லியவர்களைக் நண்டு கேட்டு மயங்கமாட்டார்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[652-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பத்து, 9-ம் தசகம்

1-ம் பாசுரம்.

மானேய்நோக்குநல்லீர் வைகலும் வினையேன் மெலிய
வானார் வண்க முகுமது மல்லிகை கமழும்
தேனார் சோலைகள் சூழ்திரு வல்லவா ழுறையும்
கோனாரை யடியே னடிகூடுவ தென்று கொலோ.

அவதாரிகை:—சென்ற தசகத்தில், ஆழ்வார் திருக்குடந்தையில் சென்று—ஆராவமுதப் பெருமானிடம் கலவை செய்யவேணுமென்று மிகவும் ஆசைப்பட்டு, "தீராவினைகள் தீர என்னை யாண்டாய் திருக்குடந்தையூராய்" என்று பிரார்த்தித்தும், சிரீவரமங்கை நகர் எம்பெருமானைவிட விசேஷ கடாக்ஷம் ஒன்றும் அவ்வெம்பெருமான் செய்யாதபடியினால் திருவல்லவாழ் திவ்யக்ஷேத்திரத்திருந்தபெருமானை உத்தேசித்துச் செல்லவேணுமென்று உத்யோகித்தார். மனக்கிலேசத்தால், அங்குப் போகப் புக்கவிடத்தில் பலம் குன்றிடப் போகமாட்டாதே தளர்ந்த நிலைமையில் தம்முடைய தசையை—திருவல்லவாழுக் கடுத்த சோலைகளினின்றும்புறப்படுகிற பரிமளத்தைமுகர்ந்தும், மதுபானஞ்செய்துதிரியும் வண்டினங்களின் ரீங்காரத்தைக் கேட்டும், அந்தத் திவ்வியக்ஷேத்திரத்தினின்றும்ஆகாயத்தில் புறப்படுகிற ஹோமதூபங்களைக்கண்டும், மற்றும் அந்தத் திவ்விய க்ஷேத்திரத்துக்கு ஏகும் யாத்திரைகாரர்களின் ஆரவாரத்தைக் கேட்டும், தரிசனம் செய்து திரும்பிவருகிற பக்தர்களின் கோலாஹலங்களைப் பார்த்தும், ஏற்கனவே பகவானைப் பிரிந்த வியஸநத்தால் நலிவுபடும் ஒரு பிராட்டி தான் திவ்விய க்ஷேத்திரத்திற்குள் செல்ல முடியாதவளாய் மேல் குறித்த சந்தர்பங்கள் தனது விரஹத்தைக் கூட்டி அதிகரிக்க, அலற்றுகிறபடியாய் அவள்பாசுரத்தாலே—பாடுகிறார்.

பொழிப்புரை:-மானைப்போல் அழகிய பார்வைகளை உடைய தோழிமார்களே, தன்னைப் பெறாத துக்கத்தையநுபவிக்கும்படி மஹா பாபத்தைப் பண்ணின நான், நாள்தோறும் மேன்மேலு மதிகரிக்கிற வியஸந பரம்பரைகளாலே மிகவும் நலிவுபட, வானை எட்டிய அழகிய கமுகும் தேன்வாசனை கமழும் மல்லிகைக் கொடிகளும் அமர்ந்த சோலைகளாலே சூழப்பட்ட திருவல்லவாழிலே நிரந்தரவாஸம் பண்ணுகிற எம்பெருமானுடைய திருவடிகளிலே புகுவது என்றோ?

குறிப்புக்கள்:-கோன்-ஸ்வாமி. நீ உன்னுடைய மனக்கிலேசமுடைய தசையில் திருவல்லவாழில் செல்லவொண்ணாதென்று தன்னைத் தோழியர் தடுப்பார்களென்று பயந்து அவர்களைத் தனது கருத்துக்கு இசைவிக்கும்பொருட்டு "மானேய் நோக்கு நல்லீர்" என்று கூப்பிடுகின்றபடி. "என்றுகொல்"—இப்போதெல்லாம் காணகிடைக்காது, அப்படிச் சந்திப்பது எத்தனை காலம் கழித்தோ" என்றவோர் சங்கையால் சொன்னபடி.

2-ம் பாசுரம்.

என்றுகொல் தோழிமீர்கா ளெம்மைநீர்
நலிந்தென் செய்தீரோ
பொன்திகழ் புன்னை மகிழ்புது
மாதவி மீதணவித்
தென்றல் மணங்கம ழுந்திரு
வல்லவாழ் நகருள்
நின்றபிரா னடிநீ றடியோங்
கொண்டு சூடுவதே.

தோழிமீர்காள்! எம்மை-பகவானைவிட்டுத் தனித்து ஒருபோதும் தரித்திருக்கமாட்டாத என்னை, நீர், நலிந்து - திருவல்லவாழ் நகரத்துக்குப் போகவிடமாட்டாதே தடுத்ததினால், என் செய்தீரோ - என் மனோநிலைமையை நன்றாக அறிந்தநீங்கள் என்ன அயுக்தகாரியத்தைச் செய்துவிட்டீர்கள். பொன்போல் திகழும் புன்னைப் பூக்களின் மேலும் புதிய குறுக்கத்திகளின் மேலும், அணவி - அணைந்துவரும் வாசனை யுக்தமான தென்றல் திருவல்லவாழ் நகரிலிருந்து வருவதை ஸ்பரிசித்தும் அந்த நகரிலுள்ள, பிரான் அடி நீறு அடியோம் கொண்டு சூடுவது-பிரபுவின் திருப்பாத தூளியை (என்று கொல் - என்றைக்கு) நாம் எல்லோரும் சிரஸாலே வஹிப்பதென்று உணராமலிருக்கிறீர்கள்.

3-ம் பாசுரம்.

சூடு மலர்க்குழ லீர்த்துய ராட்டியேன் மெலியப்
பாடுநல் வேதவொலி பரவைத் திரைபோன் முழங்க
மாடுயர்ந் தோமப் புகைகமழுந் தண்திரு வல்லவாழ்
நீடுறை கின்றபிரான்கழல் காண்டுங்கொனிச்சலுமே.

பொழிப்புரை:—சிரஸில் பூக்கள்கொண்டு முடிகளை அலங்கரித்துக்கொண்டிருக்கும் ஸஹிகளே, என்னைப் போல் பாவியாகிய ஒருத்தி நலிந்து மெலிவுபடும்படி சாமகானங்கள் சமுத்திரத்தினின்று எழும் அலைகள் போல் முழங்க, பக்கங்களிலிருந்து ஹோமதூபங்கள் ஆகாயத்தில் கிளம்பி என்னை நலியாநிற்கின்றன. அப்படிக்குள்ள திருவல்லவாழ் நகரில் ஸ்திரவாஸம் செய்யாநிற்கும் நம் மஹாபிரபுவினுடைய திருவடிகளைத் தினம் ஸேவைசெய்ய எப்பொழுது துடங்குவோமோ?

குறிப்புக்கள்:—ஸஹிகள் தங்களை அலங்கரித்துக் கொள்ளாமல் இருந்தாரேயாகில் இப்பிராட்டி அதுகண்டு மேன்மேலும் நோவுபடுவாளென்று அவர்கள் இப்பிராட்டியின் ஆறுதல்பொருட்டுப் புஷ்பங்களைக் கொண்டு சூடினார்களென்று தாத்பரியம். நீடுறை-அவதார விசேஷங்களானால் பகவான் சில காலத்திற்குப் பிறகு அவதாரத்தை முடித்துக்கொள்ள ஸம்பாவிதமாகும். அர்ச்சமூர்த்தியானால் எக்காலத்திலும் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுக்கலாமென்று திருவுள்ளம்பற்றி நெடுங்கலாம் வாழ்கின்றபிரான் என்று ஓதப்பட்டிருக்கிறதென் றறியவும்.

4-ம் பாசுரம்.

நிச்சலுந் தோழிமீர்கா ளெம்மைநீர்
நலிந்தென் செய்தீரோ
பச்சிலைநீள் கமுகும் பலவுந்
தெங்கும் வாழைகளும்
மச்சணி மாடங்கண் மீதணவும்
தண்திரு வல்லவாழ்
நச்சரவி னணைமே னம்பி
ரானது நன்னலமே.

குறிப்பு:—"நலிந்து என்செய்தீரோ" என்னபிரயோஜநத்தின் உத்தேசமாக என்னை நீர் நலிவு செய்கின்றீர்கள், அதனால் நானே அடங்கி நடப்பேனென்று எதிர்பார்க்க வேண்டா, என்று குறிப்பதின் நிமித்தமாக "எம்மை" என்றுஅகம்பாவத்தால்கூறுகிறபடி.

அனந்தாழ்வானைக் கூறியது - எம்பெருமானுக்கு ஆதிசேஷன் எப்படி அவிநாபூதமான படுக்கையோ அதுபோல நானும் நீங்கள் என்ன விரோதஞ் சொன்னாலும் அவனைவிட்டுப் பிரிந்திருக்கவல்லவள் அல்லள் என்று குறிப்பதின் நிமித்தம்.

"நன்னலமே யான்" என்ற ஒரு பதம் இங்குத் தொக்கு இருக்கின்றது. "யான்" எழுவாய் "நன்னலமே' பயனிலை. யான் பெருமானின் விபூதியில் ஒரு பிரகாரம்.

பொழிப்புரை:—பச்சிலை நீள் கமுகும் பலாவிருக்ஷங்களும் தெங்கும் வாழைகளும் மச்சுக்களுள்ள மாடங்களின்மேல் விளங்கும் மனோஹரமான திருவல்லவாழில் நின்றருள் எம்பெருமான் ஆதிசேஷனைப்போலவே என்னையும் தனக்காகவே ஆட்கொண்டிருக்கிறான். தோழிமாரான நீங்கள் என்னைத் தடுப்பதில்என்ன பிரயோஜநத்தைக் காணப்போகின்றீர்கள். யானும் எம்பெருமானின் ஆநந்தம்முதலான விபூதிகள்போல அவனுக்கு ஒரு விசேஷணம்.

5-ம் பாசுரம்.

நன்னலத் தோழிமீர்கா ணல்லவக்
தணர்வேள் விப்புகை

மைந்நலங் கொண்டுயர் விண்மறைக்குந்
தண்டிரு வல்லவாழ்
கன்னலங் கட்டிதன்னைக் கனியை
யின்னமுதந் தன்னை
யென்னலங் கொள்சுடரை யென்றுகொல்
கண்கள்காண் பதுவே.

நல்ல குணங்களையுடைய தோழிமார்களே! நல்ல அந்தணர் பகவானின் உகப்புக்காகவே திவ்ய யாகங்களைச் செய்து ஆகாயம்வரையில் ஹோம தூபங்களை வளர்க்கின்ற திருவல்லவாழ் க்ஷேத்திரத்தை அலங்கரிக்கும்கற்கண்டுபோல் ஸ்வயம்ரசமாயிருப்பவனும், அமிர்தம் போன்றவனும், என்னைத் தனது சுவரூபத்தில் அணைத்து ஜ்வலிக்கிற பேரழகையுடையவனும் ஆகிய பகவானை என் கண்கள் என்று காணப்போகின்றன!—நான் இங்கேயே தனித்து நின்று கிடக்கிறேன்—என் கண்கள் அவனை அநுபவிக்க விடாய்த்து நலிவுபடுகின்றனவே? என்ன செய்வது" நீவிர் என்னை அங்கே கொண்டுபோய் என் மனோரதத்தைப் பூர்த்தி செய்யலாகாதோ.

கலித்தொகை

[655-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 25

கொடுங்கோல் மன்னர் நாட்டிலிருந்து வந்து தன் நிழல் அடைந்த குடிகட்கு நன்மை செய்யக் கருதிய தலைவன் இளவேனிற் காலத்தில் தான் வந்துவிடுவதாகத் தலைவிக்குக் கூறிப் பிரிந்தான். அக்காலத் தொடக்கத்தில் அவன் வாராமை கண்டு ஆற்றாத தலைவி தோழியை நோக்கி, "நங்காய், நமக்கு அருள் செய்ய வேண்டுவதாகிய இந்நாள் தலைவர் வந்திலர்," எனக் கூறி வருந்தினாள். அதனைக் கேட்ட தோழி, "தோழி, அவர் வருகின்றார் என்பதனை முன்னறிவிக்கவே இளவேனிற்காலம் தூதாய் வந்திருக்கின்றது. இனி நீ வருந்தாதே" எனக் கூறி அவள் துன்பம் தணிய வற்புறுத்தியதைக் கூறுவது இச்செய்யுள்.

ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்தமரா அமும்
பருதியஞ் செல்வன்போ னனையூழ்த்த செருந்தியு
மீனேற்றுக் கொடியோன்போன் மிஞிறார்க்குங் காஞ்சியு
மேனோன்போ னிறங்கிளர்பு கஞலிய ஞாழலு
மானேற்றுக்கொடியான்போ லெதிரியவிலவமுமாங்குத்
தீதுதீர் சிறப்பி னைவர்க ணிலைபோலப்
போதவிழ் மரத்தோடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்றா லிளவேனின் மேதக !

பல்வரி யினவண்டு புதிதுண்ணும் பருவத்துத்
தொல்கவின் றொலைந்தவென் றடமென்றோ ளுள்ளுவா
ரொல்குப நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
வெல்புக முலகேத்த விருந்துநாட் டுறைபவர் !

திசைதிசை தேனார்க்குந் திருமருத முன்றுறை
வசைதீர்ந்த வென்னலம் வாடுவ தருளுவார்
நசைகொண்டு தந்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
மிசைபரந் துலகேத்த வேதிலநாட் டுறைபவர்!

அறல்சாஅய்பொழுதோடெம் மணிநுதல்வேறுகித்
திறல்சான்ற பெருவனப் பிழப்பதை யருளுவா
ரூறஞ்சி நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
யாறின்றிப் பொருள்வெஃகி யகன்றநாட் டுறைபவர்!

எனநீ

தெருமரல் வாழி தோழிநங் காதலர்
பொருமுரண் யானையர் போர்மலைந் தெழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்
வருமென வந்தன்றவர் வாய்மொழித் தூதே!

(தரவு)

(வரி. 1-8) ஒரு குழை ஒருவன்போல்-ஒரு குழையை அணிந்த பலராமனைப்போல வெண்மையான, இணர் சேர்ந்த மராஅமும் - கொத்துக்களாகப் பொருந்திய வெண்கடப்ப மலரும், பருதியம் செல்வன்போல் - சூரியனாகிய அழகிய கடவுளைப்போல (பசுமையான), நனை ஊழ்த்த செருந்தியும் - அரும்புகள் முற்றிய செருந்தி மலரும், மீன்ஏற்றுக் கொடியோன் போல் - ஆண் சுறாமீனின் உருவம் எழுதப்பெற்ற கொடியையுடைய காமனைப் போல (கருமையான), மிஞிறு ஆர்க்கும் காஞ்சியும்- வண்டுகள் ஒலிக்கும் காஞ்சி மலரும், ஏனோன்போல் - (காமன் தம்பியான) சாமன்போல (பொன்னிறமான) நிறம் கிளர்பு-நிறம் விளங்கி, கஞலிய ஞாழலும் - நெருங்கிய ஞாழல் மலரும், ஆன் ஏற்றுக் கொடியோன் போல்- இடபக்கொடியை யுடைய சிவபெருமானைப் போல (சிவப்பான), எதிரிய இலவமும்-(மலரும் பருவத்தோடு) கூடிய இலவமலரும், தீதுதீர் சிறப்பின் - குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய, ஐவர்கள் நிலைபோல் - (மேற்கூறிய) ஐவர்களின் நிறத்தின் தன்மை போல, போது அவிழ் மரத்தொடு - போதாக இருந்து மலர்ந்த மரங்களும், பொருகரை-நீர் மோதுகின்ற கரைகளும், கவின் பெற- அழகு பெற, இளவேனில் - இளவேனிற் காலமானது, நோதக-(காதலரைப் பிரிந்தமகளிர்க்கு) வருத்த மிகவும், மேதக - சிறப்பு மிகவும், வந்தன்று - வந்துவிட்டது.

ஆங்கு - அசை.

காமன் தம்பி சாமனுதலைச் 'சாமனார் தம்முன்' (கலி. 94) என்றும், 'காமனுஞ் சாமனும் போலுங் காட்சிய' (சிந்.43) என்றும் வரும் அடிகளால் அறிக.

பலராமன் ஒரு குண்டலம் அணிந்தவன் என்பதை 'வளை நாஞ்சில் ஒரு குழை ஒருவனை' (பரி 15.1) என வரும் அடியால் அறிக.

(தாழிசை)

(வரி. 9 - 12) ஒல்குப-(ஆள்பவர் கலக்க) வருந்தி, நிழல் சேர்ந்தார்க்கு - தம்மை நிழலாக அடைந்த குடிகளை, உலையாது-(அவர்) வருந்தாதபடி, காத்து ஓம்பி - பாதுகாத்து, வெல்புகழ் உலகு ஏத்த - தாம் அப் பகையரசரை வென்ற புகழை உலகத்தார் புகழ, விருந்து நாட்டு உறைபவர் - புதிய நாட்டில் இருக்கின்ற தலைவர். பல்வரி இனவண்டு - பல வரிகளையுடைய கூட்டமாகிய வண்டுகள், புதிது உண்ணும் பருவத்து - புதியதாகிய தேனை உண்ணும் இவ் விளவேனிற் காலத்தில், தொல் கவின் தொலைந்த - பழைய அழகு கெட்ட, என் தடமென் தோள் உள்ளுவார் - எனது மென்மையான முலைகளை நினையார்.

சேர்ந்தார்க்கு - உருபு மயக்கம்.

உள்ளுவார் - குறிப்பு மொழி.

(வரி 13 - 16) நசை கொண்டு - (நம்மைக் காத்தற்கு உரியவர் இவர்தாம் என்று) ஆசை கொண்டு, தம் நிழல் சேர்ந்தாரை - தம்மை நிழலாக வந்தடைந்த குடிமக்களை, தாங்கி - காப்பாற்றி, தம் இசை பரந்து உலகு ஏத்த - தமது புகழ் உலகு எங்கும் பரத்தலாலே அவ்வுலகத்தார்

புகழ, ஏதில் நாட்டு உறைபவர் - அயல் நாட்டில் இருக்கின்றவர், திசை திசை தேன் ஆர்க்கும் - எல்லாத் திசைகளிலும் வண்டுகள் ஒலிக்கும், திருமருத முன் துறை - திருமருத முன்துறை என்னும் வையைத் துறையிலுள்ள (சோலையில்), வசை தீர்ந்த என் நலம் - குற்றமற்ற என் அழகுகள், வாடுவது அருளுவார் - வாடுதலை அகற்றியருளார்.

(வரி. 17 - 20) ஊறு அஞ்சி, (முன்பு நாட்டை ஆண்ட அரசர் செய்த) துன்பத்திற்கு அஞ்சி, நிழல் சேர்ந்தார்க்கு - தம்மை நிழலாகவந்து அடைந்தவரை, உலையாது- (அவர்) வருந்ாதபடி, காத்து ஓம்பி - பாதுகாத்து, ஆறு இன்றிப் பொருள் வெஃகி - அறம் இன்றிப் பொருளை விரும்பி, அகன்ற - (அக்காரணத்தினால் ஆட்சி) நீங்கிய, நாட்டு உறைபவர் - (அரசர்) நாட்டில் தங்கியிருக்கின்றவர், அறல் சாஅய் பொழுதோடு - அரித்து ஓடும் நீர் சுருங்கின (இளவேனிற்)காலத்தில், எம் அணி நுதல் - எமது அழகிய நெற்றி, வேறுகி (முன் இருந்த நிறம்) வேறுகி (பசப்புற்று), திறல் சான்ற பெருவனப்பு இழப்பது-வலிமைஅமைந்த பெரிய அழகை இழத்தலை, அருளுவார் - அகற்றி யருளார்.

(தனிச்சொல்)

எனநீ - என்று கூறி நீ

(சுரிதகம்)

(வரி. 22 - 25) தெருமரல் - (மனம்) கலங்காதே, பொரு முரண் யானையர்-போர் செய்யும் வலி அமைந்த யானையையுடையவரும், போர் மலைந்து எழுந்தவர் - (பகைவரோடு) போர் செய்து வீரத்தோடு நின்றவரும், செருமேம்பட்ட வென்றியர்-போரிற் சிறந்த வெற்றியையுடையவருமாகிய, நம் காதலர் - நமது அன்பர், வரும் என - வருகின்றார் என்று, அவர் வாய் மொழி தூது-அவருடைய உண்மை உரைக்கும் தூதாக, வந்தன்று - (இளவேனிற் காலம்) வந்தது, தோழி வாழி - (இனித்) தோழி (நீ இனிது) வாழ்வாயாக.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 4. களம் 1.

[657-ம் பக்கத் தொடர்ச்சி]

[ஸிரீஸ் வருகிறாள்]

ஸிரீஸ்:—ஜூபிடரின் பெருந்தேவி இடுகின்ற கட்டளையை ஒருபோதுங் கடவாத நிறம் பல பூண்ட தூதியே, வந்தனம் (1). உன்றன் மஞ்சட்சிறகினால் தேனின்துளிகளும் தெளிவுறு திவலையும் என்றன் மலர்களின்மீது தூவுவோய் (2); நின் நீல்நிற வில்லின் இரு கோடியுங்கொண்டு என்புதருடை நிலங்களுக்கும் செடியறு தரைக்கும் முடிபுனைவிப்போய் (3); என் பெருந்தகைப் பூமிக்கு விலையுயர் உத்தராசங்கம் ஆவோய் (4);— நின்றன் அரசி; என்னை இங்கு இந்தச் சிறுபுற் பைந்தரைக்கு எற்றுக் கழைத்தனள்? (5)

ஐரிஸ்:—உண்மைக் காதலின் ஓர் உடன்பாட்டைக் கொண்டாடற்கு; அருள்பெற்ற இக் காதலர்க்குச் செல்வம் நனிசில நல்குதற்கும் (6).

ஸீரீஸ்: —வீனஸ்ஸேனும் அவள்தன் மைந்தனேனும் இப்பொழுது அரசியுடன் வருகின்றனரோ, விண்ணின் வில்லே, நீ அறிந்தபடி, எனக்குச் சொல்? இருண்ட டிஸ் என் புதல்வியைக் கைக்கொண்ட வகையினைச் சூழ்ந்ததிலிருந்து, அவளுடனும் அவள் குருட்டுப் பிள்ளையுடனும் நிந்தனைவாய்ந்த சங்கம் செய்வதில்லையென்று சபதம்செய்து விட்டுவிட்டேன் (7).

ஐரிஸ்:—அவளுடைய சங்கத்தைப்பற்றி நீ அஞ்ச வேண்டா. புறவிழுக்கத் தன் மகன் உடன்வர அந்தத் தெய்வம் மேகங்களைப் பிளந்துகொண்டு பாப்பாஸ்ஸை நோக்கிச் செல்லக் கண்டேன் (8). ஹைமனின் விளக்கை ஏற்றுவதன் முன், இங்கு இவன்மீதும் இம்மங்கையின்மீதும் தம்விஷமமந்திரம் சில செய்ய எண்ணினர்; எனினும், அது வீணாயிற்று (9); மார்ஸலின் காதற்றோழி திரும்பிவிட்டாள்; அவள் குளவித்தலை மைந்தனும், தன் கணைகளை உடைத்துவிட்டு, ஊர்க்குருவிகளுடன் விளையாட்டயரும் பிள்ளையேயாய் முழுவதும் இருப்

ப்ராஸ்ப்பீரோ தன் ஆவிகளைக்கொண்டு நடத்திக்காட்டுகின்ற கூத்து நிகழ்கின்றது. வானவில்லிற்கு அதிதேவதையும் தேவர்களுக்குத் தூதியும் ஆகிய ஐரிஸ் அழைத்ததற் கிணங்க, பயிர்முதலிய நிலவளங்களுக்கு அதிதேவதையாகிய ஸீரீஸ் வருகின்றாள்.

(1) ஜூபிடரின் பெருந்தேவி-ஜூனோ. ஜூனோவின் தூதி, ஐரிஸ்.

(2) மஞ்சள் சிறகு - வானவில்லின் மஞ்சள் நிறம் வாய்ந்த ஓரம். மழையும் தேனும் வானவில்லே மலர்களுக்குத் தூவித்தருகின்றதென்பது கருத்து. மலர் முதலிய எல்லா வளங்களுக்கும் ஸிரிஸ் அதிதேவதையாகையால், 'என்றன் மலர்கள்' என்கின்றாள்.

(3) வானவில் நிலத்தினைத் தொடுந் தோற்றம் மகுடம் சூட்டுவது போன்றிருக்கும்—என்பது கருத்து.

(4) உத்தராசங்கம் - மேலாடை. வானவில் பூமிக்கு அணிந்த உத்தராசங்கம்போல் தோன்றுவதுகுறித்து இவ்வாறு அழைக்கப்பட்டது.

(5) நின் அரசி - ஜூனோ.

ஸீரீஸ், ஐரிஸ்ஸை, தூவுவோய்.....புனைவிப்போய், ஆவோய்......எனக் கூப்பிட்டு, 'ஜூனோ என்னை இங்கு வரும்படி எற்றுக்கு அழைத்தாள்' என வினவுகின்றாள்.

(6) ஜூனோ உன்னை இங்கு வரவழைத்தாள்—என்று முடித்துக்கொள்க.

(7) ஜூனோவுடன், வீனஸ்ஸேனும் அவள் மகனேனும் இங்கு வருகின்றனரோ சொல். அவர் வருவதாயின் நான் அவர்களைச் சந்தித்து உடன்இருக்க விரும்பவில்லை—என்று ஸீரீஸ் கூறுகின்றாள். இங்குக் குறிக்கப்பெற்றிருக்கின்ற உரோமர்புராணக் கதை வருமாறு.

வீனஸ் என்பவள் உரோமர் புராணத்தின்படி, காமத்திற்கு அதிதேவதை. இவளுடைய மகன் க்யூபிட் என்பவன். இம்மகன் எப்பொழுதும் சிறு பாலனாகவே இருக்கின்றான் என்றும், கண் தெரியாத குருடன் என்றும், இவனைக் கொண்டு வீனஸ்ஸானவள், ஆடவர்மீதும் மங்கையர்மீதும்மெல்லிய காமபாணங்கள் எய்வித்துக் காமம் மூட்டுகின்றாளென்றும் கருதப்படும். காமத்திற்குக் கண்ணில்லை என்ற வழக்கிற்கு இணங்க க்யூபிட் குருடனாயினான்.

பாதாள உலகத்திற்கு அதிதேவன் டிஸ் என்பவன், இவனுக்கு ப்ளூடோ என்ற ஒரு பெயரும் உண்டு. ஸீரீ

பதன்றி, இனி எய்யேனென்று ஆணை இடுகின்றான் (10).

ஸீரீஸ்:—பேரரசி ஜூனோபெருமாட்டி வருகின்றாள். அவள் நடையின் தன்மையால் நானவளை அறிவேன்.

[ஜூனோ வருகின்றாள்]

ஜூனோ:—உதாரசீலமுடைய என் தங்கை எவ்வாறிருக்கின்றாள்? வளம்பெருக வாழ்ந்து தம்மக்கட் பேற்றில் பெருமை பெறும்வண்ணும் இவ்விருவரையும் வாழ்த்துதற்கு என்னுடன் வருக.

[பாடுகின்றனர்]

ஜூனோ

சிறப்புஞ் செல்வமு மணமுறை வாழ்வும்
நிறைந்த ஆயுளுங் குறைவில் பொலிவும்
ஆறு வாருக நுமக்கென
ஜூனோ விசைப்பாள் தன்னுடை வாழ்த்தே.

ஸீரீஸ்

நிலந்தரு வளமும் மேதகு மிகுதியும்
குலைகொடு முதிருங் கொடிகளுந் தருவும்
நற்றகைப் பாரமொடு வணங்கும் பயிர்களும்
வற்றாக் களஞ்சிய வளமையுங் குதிரும்
கோடையின் வெப்பும் மாரியின் குளிரும்
நாடா தென்றும் நல்லிள வேனில்
இன்பமே யுந்தமக் கிணங்கிச் சேர்க
இன்மையும் வறுமையும் விலகுக
அன்ன தாகும் ஸீரிஸ்ஸின் வாழ்த்தே (11)

பார்டினண்ட்:—கனிமிகச் சிறப்புடைப் பெருமைமிகு காட்சியிது; இந்திரஜாலத்தின் இனிதிசைந்துளது. ஆவிகள் இவையென எண்ணுதற்கு யான் துணியலாமோ?

ப்ராஸ்ப்பீரோ:—என்னுடைய சித்தத்தை நடிப்பதற்கு, தமது இருக்கையினின்று யான் என் மந்திரக் கலையால் அழைத்திருக்கும் ஆவிகளே.

பார்டினண்ட்:—இவ்வயின் யான் என்றும் வதிக. இத்துணை யருமையாயவோர் விந்தைத் தந்தையும் மனைவியும் இந்த விடத்தைத் துறக்கம் ஆக்குகின்றனர் (12)

[ஜூனோவும் ஸீரீஸ்ஸும் இரகசியமாகப் பேசிக்கொண்டு, ஐரிஸ்ஸை ஏதோவேலையாக அனுப்புகின்றனர்]

ப்ராஸ்ப்பீரோ:—இனியவென் மக்காள், இனி மௌனமாயிருங்கள்! ஜூனோவும் ஸீரீஸ்ஸும் கருத்துற இரகசியம்பேசுகின்றனர். இன்னும் சில செய்தற்குளது. பேசாதீர், சும்மாவிருங்கள், இல்லையேல் நம் மந்திரம் சிதைந்துவிடும்.

ஐரிஸ்:—அலைதரும் நன்னீ ரோடையில் வைகும் நீரமகளிர், நுந்தம் சுருள்படு நதியிடம் நீங்கி, கோரைப்புல் முடியொடும் குற்றந் தீர்ந்த பார்வையொடும், இப் பைந்தரை வந்துமை யழைத்த பரிசு கேண்மின். ஜூனோ கட்டளை இடுகின்றாள். தூய வனிதையீர் வம்மின், வந்து ஓர் உண்மைக் காதலின் உடன்பட விதனைக் கொண்டாடற்கு உதவுமின்; காலந் தாழ்த்த வேண்டா. (13)

[நீரமகளிர் சிலர் வருகின்றனர்]

எரிவெயி லுலர்ந்த அரிவாள் உடையீர், அறுவடை செய்து கைமிகக் களைத்தீர், நும் படைச்சால் நீங்கி இவ்வயின் வந்து உவகை கூர்மின்: விழாநனி கொண்மின்: வைக்கோல் வேய்ந்த தலையணி பூண்டு, புனித வனிதையர் இவரொடு இங்கு எதிர்நடம் தனித்தனி புரிந்து மருதக் கூத்தினை மகிழ்வுற ஆடுமின் (14)

[உழவர் சிலர் வருகின்றனர். வந்து வனிதையரொடு நடனமாடுகின்றனர்; முடிவில் ப்ராஸ்ப்பீரோ திடுக்கிட்டு ஏதோ பேசுகின்றான். அதன் பின்,கலகல வெனப்பல்வகை ஒலிகள் மயங்க, உழவரும் நீரமகளிரும் மறைகின்றனர்.]

ஸ்ஸின் புதல்வி ப்ராஸர்ப்பீனா என்பவள். இவள் ஒரு நாள் நந்தவனத்தில் பூக்கொய்திருந்தபோது, டிஸ் என்னும் பாதாள வுலகத்து அதிதேவன் வந்து இவளைத் தூக்கிச் சென்று தனக்கு மனைவியாக்கிக்கொண்டுவிட்டான்.

காமதேவதையாகிய வீனஸ்ஸும் அவள்மகன் க்யூபிட்டும் சேர்ந்து, ப்ளூட்டோவிற்குக் காமம் மூட்டி அவன் இவ்வாறு செய்யும்படி சூழ்ந்தனர் என்னும் சினத்தால், ஸீரீஸ், தான் அவர் இருக்கும் இடத்தில் இருப்பதில்லை என்று சபதம் செய்திருக்கின்றாளென்று கூறி, அவர்களும் ஜூனோவுடன் வருகின்றாராயின் சொல், என ஐரிஸ்ஸைக் கேட்டு, வீனஸ்ஸேனும் க்யூபிட்டேனும் வருவதாயின் தான் போய்விடுவாளென்பதைக் குறிக்கின்றாள்.

அரசியுடன்—ஜூனோவுடன். இருண்ட டிஸ் - இருளடர்ந்த பாதாளத்திற்கு அதிதேவனாதலால், இருண்ட டிஸ், என்றாள். கிந்தனை வாய்ந்த சங்கம் - பழிப்பிற் கிடமான கூட்டுறவு.

(8) வீனஸ்ஸேனும் அவள் மகன் க்யூபிட்டேனும் இப்பொழுது ஜூனோவுடன் இங்கு வரமாட்டார். ஏனெனில், ஆகாய மார்க்கமாய் மேகங்களைப் பிளந்துகொண்டு அவ்விருவரும் பாப்பாஸ் என்னும் பட்டினத்தை (இது ஸைப்ரஸ் என்னும் தீவில் இருப்பது) நோக்கிச் செல்லக் கண்டேன். ஆகையால் அவர்களை இங்குச் சந்திக்க நேருமோ என்று நீ அஞ்சவேண்டா—என்பது பொருள்.

மயில்கள் ஜூனோவிற்கு ஆவதுபோல், புறாக்கள் வீனஸ்ஸின் தேரை இழுப்பனவாகும்.

(9) ஹைமனின் விளக்கு ஏற்றுவது = விதிமுறைப்படி கலியாணச் சடங்குகள் நிறைவேறுதல். கலியாணம் முடியுமுன், பார்டினண்டும் மிராண்டாவும் கலந்துவிடும்படி காமம் மிக மூட்ட வீனஸ்ஸும் அவள்மகன் க்யூபிட்டும் மிகவும் முயன்றனர். இவர்களுடைய முயற்சி வீணும்படி அவ்விருவரும் தம் நிறையைக் காத்துக்கொண்டனர் —என்பது பொருள்.

(10) அந்தத் தோல்வியால் விளைந்த அவமானமுடன் வீனஸ் திரும்பிவிட்டாள். மார்ஸ், என்பது, உரோமர்களின், யுத்தத்திற்கு அதிதேவதையான தெய்வம். வீனஸ்ஸின்பால் மார்ஸ்ஸிற்கு அதிக ஆசையுண்டு. ஆகையால், வீனஸ் இங்கு, மார்ஸ்ஸின் காதற்றோழி என்று குறிக்கப்படுகிறாள்.

அதே தோல்வியால் அவமானமடைந்த க்யூபிட்டும்,தன் அம்புகளை உடைத்து எறிந்துவிட்டு, இனி ஒருவர்மீதும் தன் காம பாணங்களை எய்வதில்லையென்று சபதம் செய்து, சிறுபிள்ளை என்பதற்கேற்பக் குருவிகளுடன் விளையாடித் தன் காலத்தைக் கழிக்க நினைத்துவிட்டான்.

குளவித்தலை மைந்தன் = எப்பொழுதும், குளவி கொட்டுவது போல் அவன் தலையில் விஷம எண்ணங்களை உறுத்திக்கொண்டிருப்பதால், குளவித்தலை மைந்தன் என்று குறிக்கப்படுகின்றான்.

இவ் வேஷங்கள் கொண்டு நடிக்கின்ற ஆவிகள், காமம்சான்ற பருவத்தினராயினும் பார்டினண்டும் மிராண்டாவும், தம் வேட்கையை முறைதவறாமல் காத்துக்கொண்ட நிறையின் பெருமையை இவ்வண்ணம், புனைந்துரைத்துப் பாராட்டுகின்றன.

(11) மணமக்களை, ஜூனோவும் ஸீரீஸ்ஸும்தனித்தனி வாழ்த்தும் பாடல்கள் இவை. சிறந்த அழகொன்றும் தோன்றாமல் அமைந்துள்ள இப்பாடல்கள் ஷேக்ஸ்ப்பியரின் வாக்கின்றி இடைச்செருகலாகுமெனச் சிலர் கருதுவார். இம் மொழிபெயர்ப்பிலும் அவை அவ்வாறு கருதும்படியே அமைந்திருக்கின்றன.

(12) விந்தைத் தந்தை = ஜால வித்தையில் வல்ல மாமனார். மனைவியின் தந்தையைத் தன் தந்தை என்றே அழைப்பது மேனாட்டு வழக்கு. துறக்கம் = போகபூமி.

(13) ஐரிஸ், நீரமகளிரை வரும்படி அழைக்கின்றாள். ப்ராஸ்ப்பீரோவின் ஆவிகள் சில, நீரமகளிர் வேடம் புனைந்து வருகின்றன.

(14) ஐரிஸ், சில உழவர்களை வரும்படி அழைக்க, சில ஆவிகள் அவ்வேடம் பூண்டு வருகின்றன.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[659-வது பக்கத் தொடர்ச்சி]

அஞ்சினு மஞ்சுக தமிழி லஞ்சுக.

கொடுஞ்சொற்கள் பேசித் தன்னைப் போக்கினாளேனும் அம்மகள் தனிமையை உன்னியுன்னி நைந்திடும் மனத்தனாய் நடந்த இலக்குவன் நீதின்றித் திரும்பிவரும் தன் முன்னோனைக் கண்டு மனமொடு கண்களுங் களிகூர, அவனை, அண்ணலுங் கண்ணுற்று,

புன்சொற்க டந்த பகுவாய ரக்க
னுரைபொய்யெ னாது புகல்வாள்
வன்சொற்க டந்து மடமங்கை யேவ
நிலைதேர வந்த மருளே
தன்சொற்க டந்து தளர்கின்ற நெஞ்ச
முடையேன்ம ருங்கு தனியே
என்சொற்க டந்து மனமுந்த ளர்ந்த
விளவீரன் வந்த வியல்பே.

[இது மாயமான் இதனைத் தொடரவேண்டா வென்று அவன் சொன்ன சொற்களை மீறியதால் இப்பொழுது தளர்கின்ற நெஞ்சினை உடையவனாயிருக்கும் எனது அருகில், சீதையைக் காத்திரு என்று நான் சொல்லிவந்ததை மீறி இப்பொழுது மனந்தளர்ந்தவனாய்த் தனியே இந்த இளையவீரன் வருகின்ற இது—‘இலக்குமணா என்னைக் காப்பாற்று’ என்ற அற்பவார்த்தைகளைச் சொன்ன பிளந்த வாயையுடைய அரக்கனாகிய மாரீசனது வார்த்தைகள் வஞ்சனை என்பதை எண்ணாமல் பேசியவளாகிய சீதை வலிய வார்த்தைகளைச் சொல்லி ஏவியதால்,எனது நிலைமையை அறிந்துகொள்வதற்கு வந்த மயக்கமே]

என்று நிகழ்ந்தன வனைத்தையும் நேர்நின்று கண்டிருந்தா னென்ன ஊகித்ததுமன்றி, தன்சொற் கடந்துவந்த தம்பியின் பிழையை, முன் அவன் சொற் கடந்து சென்ற தன் பிழையால் பொறுத்தற் கியைந்தது இவன் புந்தி என்னும்படி,

என்றுன்னி யென்னை விதியார்மு டிப்ப
தெனவெண்ணி நின்ற விறையைப்
பொன்றுன்னு விற்கை வயவீரன் வந்து
புனைதாளி றைஞ்சு பொழுதின்
மின்றுன்னு நூலின் மணிமார்ப ழுந்த
விரைவோடு புல்லி யுருகா
நின்றுன்னி வந்த நிலையென்கொ லென்று
நெடியோன் விளம்ப நொடிவான்

[நினைத்து, ஊழ்தான் என்ன செய்துமுடிக்க இருக்கின்றதோ என்று எண்ணிநின்ற இராமனை, அழகமைந்த வில்லை யேந்திய கையையுடைய வெற்றிவாய்ந்த வீரனாகிய இலக்குவன் வந்து, அலங்கரித்த திருவடிகளில் வணங்கும்பொழுது, நெடியோனாகிய இராமன், மின்னலைப் போன்ற பூணூல் தரித்த தன் மார்பு அழுந்தும்படி விரைவாக இலக்குவனை எடுத்து அணைத்துக்கொண்டு மனம்உருகி, ‘நீ என்ன எண்ணி இப்படி இங்கு வந்தனை’ என்று கேட்க, இலக்குவன் கூறுவான்—]

இலக்குவன் கூற்றுச் சாந்தம் சால வாய்ந்தது, துயரால் நலிந்தானேனும் முனிவுறு தடுமாற்றம் அவன் மனத்திலில்லை; சீதையின்பால் பரிவே சிறக்கின்றது. கூறுவான்—

இல்லா நிலத்தி னிசையாத வெஞ்சொ
லெழவஞ்சி யேவ முறையால்
வல்வா யரக்க னுரையாகு மென்ன
மதியாண்ம றுக்க முறுவாள்
நில்லாது மற்றி தறிபோதி யென்ன
நெடியோய் புயத்தின் வலியென்
சொல்லான் மனத்தி னடையாள் சினத்தின்
முனிவோடு நின்று துவள்வாள்

[இவ்வுலகத்தில் இருக்கத் தகாததும் பொருந்த இயலாததுமான மாரீசனது கொடிய சொற்கள் எடுத்தொலிக்க, அதைக்கேட்ட சீதை அஞ்சி என்னைத் துணைசெய்யப் போம்படி கட்டளையிட, அப்பொழுது நான், செய்ய வந்த வஞ்சனையின் முறைமைப்படி, வலிய வாயையுடைய மான்வேடமுடன் வந்த அரக்கன் சொல்லே ஆகும் அது என்று நான் சொன்னாலும் அதனை மதியாமல் கலக்கமுற்று, “இங்கு நிற்காமல் சென்று இதனை அறிந்துவா” என்று சீதை என்னை ஏவ, அதனை மறுத்து நான் கூறிய சொற்களால் பெரியோய் உன் தோள்வலியை மனத்தில் ஏற்றுக்கொள்ளாமல், முதிர்ந்த சினத்தோடுநின்று துவள்வாள் ஆகி—]

ஏகாது நிற்றி யெனின்யா னெருப்பி
னிடைவீழ்வே னென்று முடுகா
மாகான கத்தி னிடையோட லோடு
மனமஞ்சி வஞ்ச வினையேன்
போகாதி ருக்கி னிறவாதி ருக்கை
புணராளெ னக்கொ டுணரா
ஆகாதி றக்கை யறனன்றெ னக்கொண்
டிவண்வந்த தென்ன வமலன்

[‘நீ போகாமல் நிற்பாயானால் நான் நெருப்பில் வீழ்வேன்’ என்றுசொல்லி விரைந்து பெரியகாட்டிலே சீதை ஓடுதலும், மனந்திடுக்கிட்டு, இருதலைக் கொள்ளி எறும்பு போன்ற இவ் வரிய நிலையில் கொணர்ந்துவிட்ட வஞ்சனையுடைய வினையின்வாய்ப் பட்ட நான், போகாதிருந்தால் அவள் இறவாமல் இருக்கமாட்டாள் என்பதை அறிந்துகொண்டு, அவளை இறக்கவிடுதல் கூடாது அது தருமம் அன்று எனத் தேர்ந்து நான் இவ்விடம் வரலாயினேன், என்று இலக்குவன் சொல்ல, பரிசுத்தனாகிய இராமன்—]

சாவாதி ருத்த லிலளான துற்ற
தலையோ தடுக்க முடியா
தாவாவ லக்க ணுறுவாளு ரைத்த
பொருளோ வகத்தி னடையா
காவாநி லத்தின் வருமேத மற்ற
தொழியாது கைக்கொ டகலப்
போவார்பி ரிக்க முயல்வார்பு ணர்த்த
பொருளாமி தென்று தெருளா.

[இவன் சீதையைவிட்டு வாரானாயின் அவள் சாகாமல் இருப்பதில்லை என்னும் நிலைமை உண்டாயிற்று. இவன் வருவதாலன்றி அவள் சாவதைத் தடுத்திருக்கவும் முடியாது. ஆ ஆ, என் செய்வது. இவன் சொன்ன உறுதிமொழிகளோ, கலக்கமுற்றிருந்த அவள் மனத்திற் பதியவில்லை. இவன் காவாமல் விட்டுவந்த அவ் விடத்திலோ அவளுக்குத் தீங்கு வரும். இவைகளெல்லாம், அவளைக் கைக்கொண்டு அகலக் கருதியவர்கள் எங்களைப் பிரிப்பதற்குச் சூழ்ந்த வஞ்சனைகளாம், என்று நிச்சயித்து—]

வந்தாய் திறத்தி னுளதன்று குற்ற
மடவாண் மறுக்க முறுவாள்

சிந்தாகு லத்தொ டுரைசெய்த செய்கை
யதுதீரு மென்று தெளிவாய்
முந்தேத டுக்க வொழியாதெ டுத்த
வினையேன்மு டித்த முடிவால்
அந்தோகெ டுத்த தெனவுன்னி யுன்னி
யழியாத வுள்ள மழிவான்

[சீதையை விட்டுவந்த உன்னிடத்தில் யாதும் குற்ற மில்லை. பேதையாகிய சீதை மனங் கலங்கினவளாய்ச் சிந்தையிலுள்ள பெருந் துயரத்தால் அவ்வாறு பேசிய அது ஆறிவிடும் என்று அமையக்கடவாய். முன்னமே என்னை நீ தடைசெய்ய, மாயமானைத் தொடர்வது தவிர்க்காமல் தொடங்கிய வினையுடையவனான நான், முடித்த இந்த முடிவினாலன்றோ ஐயோ கெடுத்தேன்—என எண்ணி, ஒருபோதும் அழியாத தன் உள்ளம் அழிபவன் ஆயினான்]

'அழியாத வுள்ளம் அழிவான்' என இச் செவ்வியில் நினைவுசெய்தளிப்பது சாலப் பொருத்தமுடையது. விருப்புவெறுப் பற்று இன்பதுன்பங்களைக் கடந்தவன் இராமனாவதை எந்நிலையிலும் மறத்தலாகாது. மாய வேடத்திற் கிணங்க வழங்கிய வருத்தமே இஃதென்பதைப் பின்னரும், "வேண்டேனிம் மாயப் புன்பிறவி வேண்டேனே" என விளம்பும் சொற்களும் விளக்கும். இதனோடு, நாடக நயமின்றி இயற்கையேயாய் யாவையும் நிகழ்த்துகின்ற வான்மீகர் நூலில் இக்களம் அமைந்தவாறு இரக்கமேனும் பெருமையேனும் ஏற்றுக்கொள்ளக் காண்கிலம். துயர் தோன்றத் தனியே தன்னெதிர் வந்துநின்ற தம்பியை நோக்கிய கோசலைமைந்தன்,

"ஓ லக்ஷ்மணா, சீதை எங்கே......அவளை விட்டு நீ எங்கு வந்தாய்......அவளை அரக்கர் தின்றுவிட்டிருப்பார்கள். அவளின்றி நான் ஒருபொழுதும் உயிர் வாழமாட்டேன்...ஐயோ, இக்காட்டில் நான் வாழ்ந்தது பயனற்றுப் போகுமா? ஓ, லக்ஷ்மணா, சீதையின் நிமித்தம் நான் உயிர்மாண்டு நீ அயோத்திக்குச் சென்றால் கைகேயி தன் கோரிக்கை நிறைவேறிச் சந்தோஷமடைவாளே. கௌசலை தனது குமாரனாகிய நான் மாண்டுவிடத் துறவி வேஷம் பூண்டு, தனது குமாரனுக்கு இராச்சியத்தை முடிவு பெறப்பெற்றுக்கொண்ட கைகேயியினிடம்தாழ்ந்து நிற்க வேண்டுமே.........ஐயோ, லக்ஷ்மணா, நீ செய்தது பெருங்குற்றம். சீதையைத் தனியாக விட்டு விட்டு நீ வந்தாயே!

என்று பழிக்குங்கால் அவன்நிலை நோக்கிய இரக்கத்தினும் அவன் சொல் நோக்கிய கயப்பே கருத்தைச் சூழ்கின்றது. துயரப்படுவோர் தம்தலையில் கைவைத்துப் புலம்புவது இயற்கை; எனினும், வடநூல் வழக்கில், இராமனே முதலாக யாவரும் கைகேசியின் தலையில் ஒரு கை வைத்துப் புலம்பப்புகாதார் இல்லை.

வடநூல் இடிக்கு இங்குப் பாவம் இலக்குவனும் இராமன் வாயின் தப்பினனல்லன். சீதையைத் தனியேவிட்டு வந்தது தக்கதன்றென்னக் கடிந்துரைக்கும் இராமனுக்கு அமைதிகாட்டுவான் துணிந்த இளையோன்—

நான் என்னிஷ்டப்படி சீதையைத் தனியாக விட்டுவிட்டு வரவில்லை. அவள் என்னை வெகு கடோரமாகக் கடிந்துபேசி ஏவினதால் நான் தங்களிடம் வந்தேன். (நின் ஆற்றலைப்பற்றி நான் எவ்வளவு தேற்றியுந் தேறாமல்) சீதை புத்திமயங்கிக் கண்ணீர் விட்டுக்கொண்டு என்னை நோக்கி—"நீ உன் தமையனார் இறந்துபோக என்னை அடையலாம் என்ற கெட்ட எண்ணம் கொண்டிருக்கிறாய். அவர் துணைக்காகப் பெருங் கூச்சலிடவும் நீ அவரிடம் போகாமையால் நீ பரதனோடு சங்கேதம் பண்ணிக்கொண்டு இராமரைத் தொடர்ந்து வந்திருக்கின்றாய். நீ மாறுவேஷம் பூண்ட சத்துரு. எனக்காக இராமரைப் பின்தொடர்ந்து அவருடைய குறைகளைத் தெரிந்துகொள்கிறாய்; ஆகையாற்றான் நீ அவருக்கு உதவிசெய்யப் போகின்றாயில்லை" என்று இக்கொடிய மொழிகளைச் சொன்னாள். இவ்வாறு சீதை சொல்ல நான் கோபத்தால் கண்கள் சிவந்து உதடுகள் துடிக்க ஆசிரமத்தைவிட்டு ஓடி வந்தேன்.

என்று, சீதைசெய்த பிழையைச்சொல்லுந் திறத்தில் தானும் தகவும் மானமும் மதியாமல் எடுத்தோதியும், இராகவன், தன் இளையோன் நிலைகண்டு எள்ளளவும் இளகாமல், எரியும் நெருப்பில் எண்ணெய் சொரிந்ததென,

தம்பி, நீ அவளை விட்டு வந்தது குற்றம். அரக்கர்களால் என்னை வெல்லமுடியாது என்பதை நன்றாக அறிந்திருந்தும் சீதை கோபமாகச் சொன்னது கேட்டு, நீ ஆச்சிரமத்தைவிட்டுப் புறப்பட்டு வந்தாய். கோபத்தினால் அவள் சொன்னதைக் கேட்டு, அவளைத் தனியாக விட்டுவந்ததைப்பற்றி உன்னிடத்தில் எனக்குத் திருப்தி இல்லை. சீதையின் சொல்லால் ஏவப்பட்டுச் சினங்கொண்டு நான் இட்ட கட்டளையைக் காப்பாற்றாதது எவ்வகையானுங் குற்றம்.

எனப் பழுக்கப் பழுக்கப் பேசிய சொற்கள், "மேன்மேற் பழுதுரைத்த லணி' என்று புதிய வோர் அணி இலக்கணத்திற் சேர்க்கப்படுமாயின் அதற்கு இலக்கியமாய் நிற்கும் தரங்காட்டி விளங்குகின்றன. இதற்கெதிர், 'சீதையை இழந்தானே தான்' என இராமன் கம்பர் நூலினும் அஞ்சினனாயினும், 'தன்சொற்கடந்து சீதையைத் தனியேவிட்டு வருவதோ இவன்,' என அயிர்த்தானாயினும், தமிழிலே இவைகளை நினைத்தானாதலின், 'அழியாதவுள்ள மழிவான்' என்ற நிலையினும் 'வந்தாய் திறத்தின் உளதன்று குற்றம்' என அவனைப் பாராட்டி, 'தந்தா குலத்தொடு உரைசெய்கை யது தீருமென்று தெளிவாய்' எனத் தேற்றுவானும் ஆயினான்.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[659-வது பக்கத் தொடர்ச்சி]

2079 வழிபாடு வணக்கமு மர்ச்சனையு மாகும்.
2080 வள்ளையோர் பாட்டு வள்ளையு மாகும்.
2081 வள்ளிபங் குழலு மிளகு மாகும்.
2082 வளைகை வளையுந் திகிரியுஞ் சங்கும்
முழையுமா வளையு மொழிய லாகும்.
2083 வள்ளிகை வளையுங் கூத்தும் வள்ளியும்
வல்லிக் கொடியும் பூணும் பெண்ணும்.
2084 வள்பற் றிரும்பும் வலியும் வாளும்
வாளி னுறையுங் கூர்மையுஞ் செறிவும்
வாருஞ் செவியும் வழங்கினர் புலவர்.
2085 வளமை யுபகாரமுங் கொழுப்பு மாட்சிமையும்.
2086 வளம் வளப்பாடும் பதவியும் பண்டமும்
வனப்பு மெனவே வழங்கினர் புலவர்.
2087 வள்ளம் மரக்காலும் வட்டிலும் வள்ளமும்.
2088 வள்ளூரம் ஊனின் வகையும் பசுத்தசையும்.
2089 வறிது குன்றலுஞ் சிறிது மறியாமையும்
பயனில் சொல்லும் பகர்ந்தனர் புலவர்.
2090 வன்னி தீயுங் கிளியுஞ் சமிதையும்
பிர[ம]சாரியு மெனப்பே சினரே.
2091 வனஞ்சுடு காடுந் துழாயு மிகுதியும்
காடு நீரும் வனப்புஞ் சோலையும்.
2092 வாகு வனப்பும் புயமு மாகும்.
2093 வாகை யொருமரப் பெயருந் தவங்களும்
ஆள்வினை முதலாஞ் செய்கையு நலனுங்
கைவினை முதலாங் கல்வியும் புலமையும்
சால்பு முதலாம் பண்பு மீகையும்

ஒழுக்க முதலாந் தவமுமறத் துறையும்
ஒருவரி னொருவர் வென்றி மிகுதியும்.
2094 வாங்கல் வளைதலுங் கொள்ளலு நீங்கலும்.
2095 வாசந் தூசும் புள்ளி னிறகும்
பூவின் மணமு மிருப்பிடமு மாகும்.
2096 வாசி யங்கியமுங் குதிரையு மாகும்.
2097 வாஞ்சிதாழ் வாரமு மகிழ்ச்சியும் விருப்பமும்.
2098 வாடை வடகாற்றுங் கலவையு நாற்றமும்
மறுகுஞ் சிற்றூரும் வழங்கினர் புலவர்.
2099 வாணி பாரதியும் வார்த்தையும் பகழியும்
கூத்துமென வுரைத்தனர் புலவர்.
2100 வாதுவர் கரிப்பாக ரும்பரிப் பாகரும்.
2101 வாதந் தர்க்கமு நோயுங் காற்றும்.
2102 வாமம் வனப்புங் குறளுமிடப் பாலும்
ஒளியுந் தொடையு முரைத்தனர் புலவர்.
2103 வாமனங் குறளு மாதிரத் தானையும்
ஓர்நூ லுமென வுரைத்தனர் புலவர்.
2104 வாயில் காரணமுந் துவாரமும் புலனுந்
தூதுந் திறலு நோயும் வாய்தலும்.
2105 வாய லசையு நுணுக்கமும் வாய்தலும்
2106 வாய்வரு வாயுங் குழலு மிடமும்
வாய்மையும் வாக்கும் வாய்த்தலும் வாயும்.
2107 வாரம் பங்கும் புனலின் கரையும்
அன்புங் கடலும் மலைச்சாரலுங் கிழமையும்.
2108 வாரி வெள்ளமுங் கதவு நாலும்
மதிலுங் கடலும் வாய்தலு நீரும்
வருவாயும் வழியும் பகுதியுஞ் சுற்றும்
மடையும் விளைவும் யானைசே ரிடமும்.
2109 வார்கொண் மூவு நீளமு நேர்மையும்
வகிர்தலுங் கச்சு நீரும் வாரும்.
2110 வாரணங் கவசமுங் கோழியுஞ் சங்கும்
தந்தியும் பன்றியுந் தடுத்தலுங் கடலும்
காருங் குடையும் புரையுமுன் மத்தமும்.
2111 வாருண மேற்கு நீரும் வாருதியும்.
2112 வாரிச மரையு நீர்ப்பூவு மாகும்.
2113 வாலே வெண்மையு மிகுதியுந் தூய்மையும்
வாலும் வாலதியு மிளமையு மாகும்.
2114 வாலி யாயுதனும் வலியு மாகும்.
2115 வாவல் கடத்தலு நசையுந் துரிஞ்சிலும்.
2116 வாழி வாழ்கெனலு மிடைச்சொல்லு மாகும்.
2117 வாழ்த்து வாழ்த்தலு மாசிடைச் சொல்லும்.
2118 வாள்கர வாளமும் ஒளியுங் கயிறும்.
கச்சு நீருங் கழறினர் புலவர்.
2119 வாளி யம்புஞ் சோணையுஞ் சுற்றோட்டமும்.
2120 வானம் விசும்பு மழையுங் கனியும்
உலர்ந்த மரமும் ஓதினர் புலவர்.
2121 வானிமேற் கட்டியுந் துகிலின் கொடியுஞ்
சேனையு மெனவே செப்ப லாகும்.
2122 வான்கொண் மூவும் மழையும் விண்ணும்
பெருமையு நீரும் வலியு நீளமும்.
2123 வானவன் பிரமனுஞ் சேரனு மாகும்.
2124 விசும்பு மேகமுந் துறக்கமும் விண்ணும்
திசையு மெனவே செப்பினர் புலவர்.
2125 விசாலங் கடம்பு மிடமு மாகும்.
2126 விசயம் வென்றியுஞ் சூரியன் வட்டமும்
வெல்லமு மெனவே விளம்பினர் புலவர்.
2127 விடர்கா முகருந் தூர்த்தரும் விடபும்
தவத்தோ ரிடமுங் கானு மாகும்.
2128 விடையெதிர் மொழியு மேறும் விடுத்தலும்
ஏகு தலுமென வியம்பினர் புலவர்.
2129 விடபம் விடையு மிடப ராசியும்
கிம்பு ரியுமரக் கொம்பு மாகும்.
2130 விடங்க மழகுங் கொடியுங் கொடுங்கையும்
ஆண்மையு முகடு மறைந்தனர் புலவர்.
2131 விடலை பாலைத் தலைவனும் விறலனும்.
2132 விடமொரு மரமுந் தேளு நஞ்சும்.
2133 விண்ணு காசமு மேகமுந் துறக்கமும்.
2134 விண்டு மாயோனும் வெற்பும் வேயுங்
காற்று மேகமுங் கழறினர் புலவர்.
2135 விதப்பு வலியு மதிலுறுப்பு மிகுதியுங்
கம்பித முமெனக் கழறினர் புலவர்.
2136 விதவை கலன்கழி மகளிருஞ் சோறுங்
கைம்மணி யுமெனக் கழறினர் புலவர்.
2137 வித்தகர் கொல்லரு மாயரு மாகும்.
2138 விதிர்ப்பு நடுக்கமு மிகுதியுங் கம்பமும்.
2139 விதியே குணமு மியல்பு மயனும்
வினையு மூழும் விளம்பினர் புலவர்.
2140 வித்தம் பொன்னும் பழித்தலு ஞானமும்.
2141 விதம்புட் பொதுவும் விதமு மாகும்.
2142 விந்தம் வனசமும் வெற்பு மாகும்.
2143 விபுலம் பெருமையும் விரிவு மாகும்.
2144 விபுதர் முற்றத் துறந்தோரும் விண்ணவரும்.
2145 விபூதி குற்றமுங் கொடுமையுந் தசையும்
வெண்ணீறு நரகுஞ் செல்வமும் புனலும்
உக்கமு மெனவே உரைத்தனர் புலவர்.
2146 விம்ம லொலித்தலு மேங்குதலு மாகும்.
2147 வியங்கொள் வோனு மழுவும் வில்லும்.
2148 வியப்புச் சினக்குறிப்பு மதிசயமு மாகும்.
2149 வியாளம் பாம்பும் புலியும் வியாழமும்.
2150 வியலே யகலமுங் காடுமேம் பாடும்
மாவட் டம்மென வழங்கினர் புலவர்.
2151 வியர்ப்பு மேவலும் பொருதலு மச்சமும்
செறிவு மெனவே செப்பினர் புலவர்.
2152 வியங்கோள் கோள் மேவலு மாகும்.
2153 விரையே மணமுஞ் சாந்தும் வித்தும்
தூபமு மெனவே சொல்லினர் புலவர்.
2154 விரோதம் வேறு பாடு மிருளும்
மயிருமெனவே வழங்கினர் புலவர்.
2155 விருத்தி தன்றொழிலும் வளர்ச்சியு மாளும்
விரிபொருளு மிலாபமும் விளம்பினர் புலவர்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
பாதாமி லேகியம் ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம் 2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம் 2-0-0
குழந்தைகளுக்கு
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை 0-4-0
பால சஞ்சீவினி 0-4-0
பால ஸுதா (டானிக்) 1-0-0

தைலங்கள்:
சந்தனாதி 6 அவுன்ஸ் ரூ. 1-0-0
அமிர்தாமலக „ 0-12-0
மிருங்காமலக „ 0-12-0
ஸ்திரீகளுக்கு
ஸுதக டானிக் 2-0-0
கர்ப்பாசய டானிக் 2-0-0
ப்ரஸவ லேகியம் 1-8-0

குமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மடச்யாவனப்ராசா மடமிருங்காமலக தைலம் கோரோஜன மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மட. ஸ. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

மட. ச்யாவனப்ராசு சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜவரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

2156 விரைவு சீக்கிரமும் வெ[ம்]மையு. வேண்டலும்.
2157 விரணம் வீழுதலு மூறும் விளம்புவர்.
2158 விரிவு விடபு மகலமும் விளம்புவர்.
2159 விருந்தஞ் சுற்றமும் மிருகக் குழாமும்.
2160 விருத்தமோர் கவிதையும் வட்டமு மூப்பும்.
2161 விலங்குகால் விலங்குங் குறுக்கு மிருகமும்.
2162 விலங்குத லேசெல விடுதலு நீங்கலும்
எறிதலு மெனவே யிசைத்தனர் புலவர்.
2163 வில்லே யொளியு மூலமும் வில்லும்.
2164 வில்லே ருழவர் வேடரும் வேந்தரும்.
2165 விலோதம் பெண்மயிர்ச் சுருளும் பதாகையும்.
2166 விழுமஞ் சிறப்புஞ் சீர்மையு மிடும்பையும்.
2167 விழவு மிதுன ராசியும் விழாவும்.
2168 விழைச்சுப் புணர்வும் இளமையு மாகும்.
2169 விழைந்தோன் கொண்கனும் வேட்டோனு மாகும்.
2170 விழைவு புணர்ச்சியுங் காதலு மாகும்.
2171 விளரி யிளமையும் யாழும் வேட்கையும்
யாழி னரம்பு மிகுதியு மாகும்.
2172 விளவு சுயரு விளாமரமு மாகும்.
2173 விளிவு சாதலுங் கேடு மாகும்.
2174 விளக்கு விளக்கி னொளியும் ஒளியும்.
2175 விளரே கொழுப்பு மிளமையும் வெண்மையும்.
2176 விளையே யிளமையும் புலமு மாகும்.
2177 விறலே வலியும் வென்றியு மாகும்.
2178 விறப்பு வெஞ்சமருஞ் செறிவு மச்சமும்
வன்மையும் பெருக்கமும் வெற்றியு மாகும்.
2179 விஜயக ளைங்கரன் ருனும் புத்தனும்
அருகனு மெனவே யறைந்தனர் புலவர்.

வர்த்தமானம்

நாயின் பேரன்பு:—சிக்காகோ நகரில் போலீஸ் இலாகாவைச் சார்ந்த துப்பறியும் நாயொன்றும் வேறொரு சிறு நாயும் அதிக அன்பு கொண்டிருந்தன. ஒரு நாள் போலீஸ்நாய் மோட்டாரில் அகப்பட்டு இறந்துவிட்டது. மற்ற நாய் இறந்த நாயின் அருகிலேயே நெடு நேரம் காத்திருந்து சப்தமிட்டுக் கொண்டிருந்தது. அதன் துயரத்தைக்கண்ட ஒரு பெண்மணி அந்தச் சிறுநாயைத் தூக்கிக்கொண்டு தன் வீட்டிற்குச் சென்றாள். ஆனால் அங்குக் கூட அந்த நாய் ஆகாரம் எதுவும் சாப்பிட மறுத்துக் கத்திக்கொண்டிருந்தது. பின் அது எப்படியோ தப்பித்துக்கொண்டு துப்பறியும் நாய் இறந்த இடந்தேடிச் சென்றது. அதற்குள்ளாக இறந்த நாயைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். சிறு நாய் அதை அங்குமிங்கும் தேடி அலைந்தது. இவ்வாறு பல தினங்களாக அந்த நாய் அதே இடத்தில் தேடி அலைந்து இறந்தது.

*　　*　　*

189/60

பூனையைக் கடித்த எலி:—பர்மிங்ஹாமில் ஒருவர் ஒரு எலியைப் பொறி வைத்துப் பிடித்தார். அந்த எலியின் வாலில் ஒரு கயிற்றைக் கட்டி வெளியில் எடுத்து அவர் வீட்டில் வளர்ந்த பூனையிடம்கொண்டு போனார். எலியைக் கண்டதும் அந்தப்பூனை கத்தியதே ஒழிய எலியைப் பிடிக்கவில்லை. மெதுவாய் அப்புறம் சென்றது. எலியைப் பிடித்தவர் எலியைத் தூக்கிக் கொண்டுபோய்ப் பூனையின் முன் நிறுத்தினர். அப்பொழுதும் அந்தப் பூனை எலியைக் கடிக்கவில்லை. எலிதான் பூனைமீது பாய்ந்து பூனையின் முகத்தைக் கடித்தது. பூனை பயந்து ஓட்டம் எடுத்தது.

*　　*　　*

நெடுந் தூக்கம்:—அமெரிக்காவில் பெட்ரீசியா மெக்வையர் என்ற 28 வயதுள்ள ஒரு மாது சென்ற இரண்டு வருஷங்களாக ஓயாது தூங்கிக்கொண்டிருக்கிறாள். இவளுக்கு ஆரஞ்சு ரசம், கோழி முட்டைகள், பால் முதலியன பலாத்காரமாக ஆகாரமாகும்படி உட்செலுத்தப்படுகின்றன. இவற்றை உண்டு அம்மாது தேக எடை அதிகரித்து வளருவதுடன் நில்லாமல் வசீகரமான அழகும் பெற்றுவருகின்றாள். நாளுக்கு நாள் அவள் முகம் உருண்டை வடிவமாகவும் மேனி பளபளப்பாகவும் மாறி வருவதாகக் கூறப்படுகின்றது. இவள் இவ்விதம் தூங்க ஆரம்பிப்பதற்குச் சில வாரங்கள் முன்னிருந்து காலையில் வெகுநேரம் படுக்கையிலிருந்து எழுந்திருப்பதில்லையாம். ஒரு நாள் காரியாலயத்திற்குச் சென்று வீடு திரும்புகையில் ரயிலில்உறங்கிவிட்டாள். அகஸ்மாத்தாக விழித்தெழுந்து வீடு போய்ச் சேர்ந்தது முதல் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கிறாள். அமெரிக்காவில் இந்தத் தூக்க வியாதி மிகவும் வியாபகமாயிருக்கின்றதாம். ஒரு பூச்சி கடிப்பதால் இந்நோய் ஏற்படுகிறதெனக் கூறப்படுகின்றது. இதனால் இதுவரை அத்தேசத்தில் 160 பேர் இறந்திருக்கின்றனர். பெட்ரீஷ்யா மெக்வையருக் கேற்பட்டுள்ள இந்த நோயின் சுபாவம் அதிசயமாகக் காண்கிறதாம்.

அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

அமிர்தசாகரம் போன்றவை.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு	ரூ. 1 0 0
5 டப்பிகள்	ரூ. 4 0 0

இளம்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இளம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ...	... Rs. 1,55,66,720
Out of a business of	... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security—
for the policyholder from an investment point of view.
for the policyholder and after him for his wife and children.

Claims paid over	... Rs. 1,00,00,000
Total Assets exceed	... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)